கடவுள் ச[illegible]தம்

கே.ராஜகோபாலாச்சாரியார்

பதிப்பாசிரியர்: பி. ஸ்ரீ.

கடவுள் சித்தம்

கே. ராஜகோபாலாசாரியார்—கலாநிலயம்

பிரசுரம்:

மதராஸ் ப்ரிமியர் கம்பெனி

முழு விற்பனை உரிமை:

தமிழ்நாடு வெளியீடு

33, பிராட்வே, சென்னை

முதற்பதிப்பு 1946.

286
286

விலை ரூ. 2/-

Printed at Thompson & Co. Ltd., (Minerva Press)
33, Broadway, Madras, (P. I. C. No. Ms. 15)
and Published by the Madras Premier Co.,
3, Perianna Maistri Street, Madras. (P. I. C. No. Ms. 39-a)

கடவுள் சித்தம்

முன்னுரை

யாக்கைக்கு இரைதேடுவதுடன் மனித வாழ்க்கை நின்றுவிடவில்லை. விலங்கினின்றும் மனிதனை வேறு பிரித்து உயர்த்தி வைக்கும் ஒரு சக்தி அவனது உள்ளத்தில் என்றும் இயங்கிக் கொண்டிருக்கிறது.

காவியம் ஓவியம் சிற்பம் சங்கீதம் நடனம் ஆகிய மென்கலைகள், வயிற்றையே நினைத்து வாழும் இந்நாளிலும் நம்மிடை நடமாடுவதற்குக் காரணம், மானிட உள்ளத்தின் அந்த இயக்கந்தான். அது இல்லாவிட்டால், மனிதன் தனக்குரிய தனித்தன்மையை இழந்து, இரண்டுகால் விலங்காய்த் திரிவான்.

பிறந்த மனிதன் இருந்து வாழ்வதற்கு மனையொன்று அவசியமே. வயிற்றிற்குரிய அவசியப்பொருள்களைத் தேடுவதுடன் அவன் முடிவதாயின், கிரஹ அமைப்பில் சமையல் அறையும் உக்கிராண உள்ளும் அவனுக்குப் போதுமே. ஆனல் அவன் இந்த அறைகளுடன் நிற்பதில்லை. வீட்டின் முகப்பில் முன்கூடம் ஒன்றை அழகுபட அமைக்கின்றான். மனையமைப்பு நூலும், அவசியமில்லாத இம் முன்கூடத்திற்கு இடந்தந்துள்ளது. சமையல் அறையையும் உக்கிராணத்தையும் பிறர் காணுத வண்ணம் வீட்டின் பின்புறத்தில் அமைக்கும் அவன், முன்கூடத்தைப் பலர்காண முன்புறம் அமைத்து, அதனைப் பட்டுத் திரையாலும் படங்களாலும் அழகுடைய வேறு பொருள்களாலும் அலங்கரிக்கின்றனே, ஏன் இது ?

அவனது இச்செயல் கருத்துடையதே. தனது காரியத்தின் கருத்தை அவன் அறியாமலும் இருக்கலாம். எனினும், கருத்திலா வழி அது நிகழவில்லை. அவசியப் பொருள்களுடன் மானுட மனம் அடங்கி அமையாமையைக் குறிப்பதாகும் அவன் செய்யும்

முன்கூட அலங்காரம். அவசியங் கடந்த ஒரு தத்துவத்துடன் உறவு கொள்ள அவாவுகின்றது அவன் மனம். அவாவிய அவ்வுறவினை எட்டுவதற்குச் செய்யும் மனத்தின் முயற்சியே இவ் வலங்காரமாக மலர்கின்றது.

உறவே கருத்தாக உள்ளம் நாடுகின்ற **தத்துவம்** அழகு என்ற பெயரால் அறியப் பெறுகின்றது. அழகின் மறுபெயர்தான் கலைநலம். இந்த நலத்தைப் பெற்று நிறைவின் நிரம்பவே உள்ளம் இடைவிடாமல் இயங்கிக்கொண் டிருக்கின்றது. இந்நலங் கலந்த உள்ளத்தவனே உள்ளபடி வாழ்ந்தவன் ஆகின்றான். மற்றவர் நடைபிணங்களே.

எனின், மானுட நல்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகும் காவ்யாதி நற்கலைகள். கலைநலத்தால் கனியலான பெருமக்களின் உள்ளத்தின் மலர்ச்சியே காவ்யங்கள். ஆதலால் இந்நலத்தினை மாந்தர்பால் நல்க வல்லவை ஆகின்றன அவை. ஆனால் காவ்யக் கலையின் துணையினாலேயே, எல்லோரும், எத்திறத்தவரும் கலைநலத்தினைத் தமதாக்கிக் கொள்வதற்கு இயல்வதில்லை. ஏனெனில், அவைகளோடு நெருங்கிப் பழகுவதற்கு மனம் ஓரளவு கலைப்பயிற்சி பெற்றிருக்க வேண்டுவது அவசியமாகின்றது. இப் பயிற்சி இல்லாதாரையும் தன்வயப் படுத்தி உயர்த்திவைக்கும் தன்மை வாய்ந்தது நாடகக் கலை.

காட்சியும் நடிப்பும் சொல்லும் ஒன்று சேர்ந்து துணைசெய்வதால் பயிற்சியின் முதிராத மனத்திற்கும் மெல்லமெல்லக் கலையுடன் உறவு கொள்ளுதல் எளியதாகின்றது. போதனாமுறை பற்றிய ஆராய்ச்சியில் முதிர்ந்த மேனாட்டு அறிஞர் பலர் கூறி வைக்கும் உண்மையிது. பள்ளிக்கூடங்களில் இளஞ் சிறுவருக்குக் கல்வி அளிக்கையில், அவரது இளமனம் வருத்தம் அடையா வண்ணம் காட்சியின் துணையாலும் ஓசையின் உதவியாலும் கற்றுவைப்பதே சிறந்த முறை என்று அவர் கூறுகின்றனர். எனின், சாதாரண மாந்தருக்குக் கலைப் பயிற்சி எளிய வழியில் அளிக்க நாடகம் சிறந்த சாதனம் ஆகும்.

நாடகக் கலையின் காரியம் இதுவாயின், நாடகம் கற்பனைத் திறம் வாய்ந்த காவியமாய் இருத்தல் அவசியமாகும். நாடகத்தின் உடல் கதை. அக்கதையும், ஒரு நாள் அல்லது சில தினங்களில் இடையறுது நிகழ்ந்து முடியும் நிகழ்ச்சிகளைக் கொண்டதாய் இருக்கவேண்டும். அதனை இயக்கும் உயிர் கதையை நிகழ்த்திச் செல்லும் ஆசிரியனது உள்ளக்கருத்தும், மனோபாவம் பொதிந் துள்ள சொற்களும் ஆகும். இன்னபடி உயிரும் உடலும் இயைந்து நடவாக்கால், ஒரு நாடகம் நயம்பட நடிப்பதற்கும் நலமுறக் காண்பதற்கும் உரியதாகாததோடு, அது எவர்க்கும் எந்த நன்மையும் தரவல்லதும் ஆகாது.

இந்நாள், நாம் எங்கெங்கும் காணலாகும் இடுதிரையும் அதிர்வெடியும், பாட்டும் பகட்டுடையும், வாய்வழியும் சிறுமைச் சொற்களும், மின்சார விளக்கொளியும் நாடகம் என்ற பெயர் பெறுகின்றன. அன்னதற்குக் காரணம், நாடகம் நடத்துவோரும் எழுதுவோரும் கலையெனும் நலத்தினை ஒரு சிறிதும் அறிந்திரா மையே ஆகும். ஆகவே **நாடகத் திரு** தன் தேசுகெட்டு இழிய நேர்ந்துவிட்டது. இது அன்று கலையாராதனை.

இந்நிலையில் ஒன்று கேட்கலாம். வியாஸர், வான்மீகி, கம்பர் அனைய பெருமக்கள் ஆக்கிய இதிகாஸ புராணக் கதைகள் தானே பெரும்பாலும் நாடகமேடை ஏறுகின்றன என்னலாம். உண்மையே. அவைகளை இயற்றியவர் கலைநலம் கைவரப்பெற்ற பெருமக்களே. ஆனல் அரங்கேறும் கதைகளில் அன்னரின் உள்ளத்தையா காண்கின்றோம்? இல்லை. உயிர் அற்ற கதை யின் சவத்தைத்தானே கட்டியழக் காண்கின்றோம். காவ்யங்களை நிகழ்த்திவைக்கும் மேன்மையோரின் உள்ளத்தை உணரவல்லார் அல்லாதார் கைப்படின் அக்கதைகளும் கலைநலம் கெடாமல் இருப்பதற்கு இல்லை. எனவே இந்நாள், நாடகம் குறித்த பயனை நல்குவதில்லை.

நிற்க, புராணக் கதைகளை அகற்றியும், ஜனசமுக நலனே தமது கருத்தெனக் கூறியும் புது நாடகங்களை எழுதி நடிக்கின்ற

வர்களும் இருக்கின்றனர். அவர்களில் பெரும்பாலோர் தமிழ்ப் பயிற்சியும் இல்லாதவரே யாவர். இந்த உம்மை கருத்துடைய எச்ச உம்மை. மற்று, அவர் பெற்றிருப்பது, இல்லாமை தருகின்ற அஞ்சாமை. இச்செல்வம் உடையவீரர், நாடகத்தை அரசியல் மேடையாகவும் சமூகத் திருத்த சபையாகவும் செய்து, பெரியதொன்று புரிந்துவிட்டதாக மகிழவும் செய்கின்றனர்.

இவ்வழியதான முயற்சி மாந்தர்க்கு நன்மையைத் தருமேல், நாமும் மகிழ்வோம். ஜனசமூக வாழ்க்கையில் காணக்கிடக்கும் குற்றங் குறைகளை நாடக மேடையில் தோன்றக் காட்டினால், ஜனங்கள் திருந்தி முன்னேறுவார் என்பது பலரது கருத்தாய் இருக்கின்றது. இது மேற்பார்வைக்கு உண்மைபோல் தோன்ற லாம். நெருங்கி நோக்கினால், விலக்க விழைந்த தீமை பெருகிப் பரவுவதையே நாம் காண்பவர் ஆவோம். தீமைகளைத் தீட்டிக் காட்டுவதால் ஒருநாளும் தீமை விலகாது. நன்மையின்பால், நேர்மையின்பால் ஆசை கொள்ளுமாறு செய்வதொன்றே, அவை அல்லாதவைகளுக்கு இடந்தராதது ஆகும். இந்த நலத்தை நல்க வல்லது நற்கலையே.

எமது இக்கூற்றிற்கு எதிர் உரைப்பாரும் இலராகார் என் பதை அறிவோம். அவர்கள் **பெர்னட்ஷா, ஆர்னல் பென்னட்டு** போன்ற நாடக ஆசிரியர்களைச் சான்றாகக் கூறலாம். ஆனால் அந்த **ஷாவும் பென்னட்டும்,** தாம் ஆகாமையை அவர்கள் முதலில் உணர்ந்துகொள்ளவேண்டும். மேலும் அந்த ஷாக்களும் பென் னட்டுகளுந்தான் என்ன சாதித்துவிட்டனர்? இங்கிலாந்தில் மாந்தர் எத்தூரம் திருந்தி யுள்ளார்? நல் வாழ்கைக்கே உரிய அமைதியும் இனிமையும் வாய்ந்த வாழ்க்கையினரோ அவர்? தம் கைப்பட்ட பகைவரைத் தூக்கிலிட்ட செய்தியை, நெடிது வரைந்தும் வாசித்தும் மகிழ்வதே ஷாக்கள் தந்தபயன் எனின் அவர்களுக்கு ஒரு கும்பிடு.

முன்னுரை நீள்வதை, புத்தகம் வெளியிடுவோர் விரும் பாதவர் ஆகலாம். எனவே இக்கருமத்தைச் சில வார்த்

தைகளில் முடிப்போம். இதுவரை யாம் கூறி வந்த விதி களுக்கு இணங்க இந்நூலை ஆக்க முயன்றுள்ளோம். எமது முயற்சி எத்தூரம் கைகூடியுள்ளது என்பதைக் கூறவேண்டி யவர் வாசகர்களே. கலையே, குறியாக முயன்றுளோம் ஆதலால், முயற்சி அளவிலேயே எமக்குக் கீர்த்தி யுண்டு.

உளவாகும் தீமைகள் அகன்று அழிய, வேண்டப்படுவது நல் லவர் நடமாட்டமே என்பதும், நல்லவரின் நன்மைவழி நடக்க வல்லது கடவுளின் சித்தம் என்பதும், அது சென்று நிறைவது மெய்ந்நெறி நன்மை யென்பதும், இந்நாடகத்தை இயக்கும் தாய்க்கருத்து ஆகும். இதனால் கடவுளின் சித்தம் **இது, இது,** என்று யாம் கூற முயல்வதாக எவரும் கொள்ளவேண்டா. பேதையர் அல்லரேல் எவரும் அவ்வழிதுணியார்? மெய்ஞானம் கைவந்த முனிவருக்கும் அது இயலாத தாயிற்றே! இயலாமை யில் துணியும் அஞ்சாமையும் ஆள்வினையுடைமையும் எமக்குஇல்லை. கரணங்க ளன்றிக் காரணமும் கடந்து எங்குமாய் எல்லாமாய் நிற் கும் ஒரு பொருளின் கருத்து அளந்து கூறுதற்கு உரியதாமோ! திருமாலே தெரியக் காட்ட, நாரதரும் அதன் **தெரிவரு** தன்மை யைத்தானே தெளிந்து உவக்க நேர்ந்தது. இந்த ஞானம் கைவந் தால் போதுமே. பின் நாம் வாழ்ந்து விட்டோம்.

இந்நாடகம் ஆக்குவதில் யாம் கையாண்ட முறை புதியது. சாதாரணமாக ஐந்து அங்கங்களில் நாடகத்தை அடக்குகின்றனர். இடையறுது தொடரும் மூன்றரை நாள் நிகழ்ச்சிகளை இருபது காட்சிகளில் அடக்கி இந்நாடகத்தைச் செய்துள்ளோம்.

நடித்தல், திரைப்படம் எடுத்தல் ஆகிய உரிமைகள் நூலாசிய ருக்கே உரியன என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கே. ராஜகோபாலாசாரியார்—கலாநிலயம்
ஆசிரியன்

நாடக பாத்திரங்கள்

கிருஷ்ணன்	...	*திருமால்.*
நாரதர்	...	*திரிலோக சஞ்சாரியான முனிவர்*
ஜயநந்தன்	...	*ஆயர்பாடியின் அரசன்.*
கௌமார நந்தன்	...	*இளவரசன்.*
சூரசிம்மன்	...	*படைத்தலைவன்.*
வித்யாநந்தர்	...	*அமைச்சனும் ஞானாசிரியனும்.*
சுதாமன்	...	*விகடப் புலவன்.*
வஜ்ரதரன்	...	*மலைநாட்டரசன்.*
மாயாவதி	...	*சூரசிம்மனின் மகள்.*
சத்யவல்லி	...	*வஜ்ரதரன் மனைவி.*
பெருந்தேவி	...	*சுதாமன் மனைவி.*

வீரர்கள், பணிப்பெண்கள் முதலியோர்.

நாடகக் காலம் :—*மூன்றறை நாள். ஐந்தாம் நாள் உதயத்தில் நிகழ்ச்சி நிறைவெய்துகின்றது.*

[தேவர் கணக்கின்படி இந்நாடகம் ஒரு நாழி நிகழ்ச்சி.]

[நடித்தல், திரைப்படம் எடுத்தல் ஆய உரிமைகள் ஆசிரியருடையவை.]

மதுரை காமராசர் பல்கலை
அ...
தி. க. சண்...

கடவுள் சித்தம்

[புதுமுறையதான ஒரு நாடகம்]

காட்சி—1

தேவலோகம்
ஒரு சோலை

[ஈசனது நெற்றித் தனிக்கண் நெருப்பையும் குளிர்விக்கும் கொற்றத் தனியாழ்க் குலமுனிவனும் நாரதர் ஒரு பகல் திருமாலைக் கோவியர் தலைவனைத் தரிசிக்கும் எண்ணங்கொண்டு அவனை வாயாரத் துதிக்கலானார்.

அன்பர்க்கு அடங்கி யருளும் அப் பெருமகன் முனிவர் விரும்பிய வண்ணமே கோவியர் புடைசூழப் பாலகிருஷ்ணனாய் அவர்முன் தோன்றி யருளினான்.

கண்கொளா இக்காட்சியைக் கண்ட முனிவரர் மெய்யொடு மனமும் மறந்து, அவனது திருநாமங்களைக் கூறினவராய் ஆடலானார். தன்வயம் துறந்தாடும் முனிவரை எம்பிரான் நெருங்கினான். தோன்றிய கோவியர் மறைந்தனர்.]

கண்ணன்: நாரதா, ஏன் அழைத்தாய்? யாது வேண்டும்?

நாரதர்: பிரபோ, அதுதான் எனக்கும் விளங்கவில்லை. தேவரீரைக் கண்டபின், நினைக்கவும் கேட்கவும்

இயலுமோ தான்! தத்துவத்தால் குறையற நிமிர்ந்தபின் விரும்பிக் கேட்பதற்கும் கேட்டுப் பெறுவதற்கும் ஒன்று உளதோ? தேவா! இல்லை,......ஒன்றுமில்லை.

கண்ணன்: எனின், நன்று......நாரதா, நான் வருகின்றேன்.

நாரதர்: இல்லை,......ஆம்!......ஒன்று, தேவா! ஒன்று கேட்க விரும்புகின்றேன். அருள் சுரக்கவேண்டும்.

கண்ணன்: (இளநகையாடும் முகத்தினனாய்) குறையற நிமிர்ந்த உன் உள்ளம் கேட்பதால் குறையகன்றபடியாகாதே! நாரதா, ஏனிது? யாது உன் கருத்து?

நாரதர்: எனக்கொன்றும் வேண்டா. மற்று, இந்த உலகம், நீ தந்த......இந்த உலகம், அது படரும் வழி என்னைத் திகைக்கச் செய்கின்றது......!

கண்ணன்: நான் தந்த இந்த உலகத்தைக் கவனித்துக்கொள்ளும் பொறுப்பு என்னுடையது. உனக்கு ஏன் இந்த விசாரம்?

நாரதர்: விளங்காதபொழுது விசாரிக்கத்தானே வேண்டி நேர்கின்றது. தீமை வாய்ப்பட்டு உழல்கின்றதே இவ்வுலகம்! ஆசையும் மோசமும் நாசமுமேயோ மானுடப் பிறவியின் கதி! அவர் உய்யும் வழியிலதோ! அருட்கடலே, விளங்கிற்றில்லை. உன் சித்தம் தெரிந்ததில்லை. ஆதலால்......,

கண்ணன்: ஆதலால், என்ன? என்னை என்ன செய்யச் சொல்கின்றாய்?

நாரதர்: ஒன்றுமில்லை,......தெரிந்துகொள்ள விழைகின்றது என் மனம்.

கண்ணன்: ஐயா, இது சிருஷ்டியின் இரகஸ்யம், விளங்குவது அவ்வளவு எளியதன்று; விளங்கவும் வேண்டுவதில்லையே!

நாரதர்: தேவா, என்னை மேன்மேலும் திகைக்கச் செய்கின்ருய். ஏன்? நான்தான் சிறிது தெரிந்துகொள்ள லாகாதோ? உன் மாயைத் திரையைச் சிறிது விலக்கி, நான் தெளிவு கொள்ளுமாறு செய்தால், அதனுல் உனக் குத் தீங்குண்டோ?

கண்ணன்: நாரதா, இது கேள்: பெரியதும் நல்லது மான எதுவும் விளக்கத்தில் அடங்குவதில்லை. விளக்கம் முடிவது விளங்காமையிலேதான். இந்த உண்மையை நீ அறியாதது ஏனே!

நாரதர்: தேவாதிதேவா, அது எம்போன்றவர் திறத் தில் உண்மையாகலாம். 'ஆழி கரையின்றியும் நிற்க வில்லையோ! அக்கடலின் நடுவில் வடவைக் கனல் அவியா திருக்கவில்லையோ! ஆலமும் ஒரு நாள் அமுதாகவில்லையோ! அந்தரத்தில் அகில கோடிகள் நிலை கெடாமல் நிலைத் திருக்கவில்லையோ, உன் திருவடி ரேணுவால் கல்லும் மட மங்கை யாகவில்லையோ! தேவரீருக்கு எது அரியது! எனவே, பெரும......,

கண்ணன்: முனிவா, கேள்: மனிதன் என்னை முற்றி லும் மறந்துவிட்டான். இந்திரியங்களுக்கு ஆட்செய்யும் மண்ணும் பொன்னும், மற்றப் பொருள்களும், சாதனங் களுமே அவன் நெஞ்சில் இடங்கொண்டு நிலைத்திருக்கின் றன. நெஞ்சு நிறையச் செய்யும் தன்மையன அவை யல்ல வாதலால், என்றுங் குறையே எஞ்சுகின்றது. அக் குறைக்குக் காரணம் பொருள்களின் குறைவே என்று கொண்டு பேதையவன் ஒன்று விட்டு ஒன்று

பற்றி உழல்கின்றான். என் இரு கை நீட்டி, நான் பரிந்து அழைத்தாலும், அவன் உதறித் தள்ளிவிட்டுத் தன்னைத் தானே இறுகத் தழுவிக்கொண்டு விரைகின்றானே! இதற்கு நான் என்ன செய்வது?

நாரதர்: எனின் அவனை,—அறிவின் தெளிவில்லாத அவ்வேழையை—இறைவா, அப்படியே விட்டு விடுவதா? கண்ணில் பூப் படர்ந்தது எனில், அப் பூக்கரைய அழ அழவேனும் மருந்துகொண்டு முயல வேண்டுவதில்லையோ!

கண்ணன்: அவனை ஒருவரும் அப்படியே விட்டுவிடவில்லை. நல்லவர் உளர். நன்மையும் பெருமையும் உலகத்தை விட்டு இன்னும் அகன்று விடவில்லை. நல்லவர் உறவினால் அவர்க்கு உய்யும் வழி உளது. நல்லவர் நன்மையின் வழி நடக்கும் என் சித்தத்தின் தன்மையை நீ தெரியக் காட்டுவேன். நாரதா, செந்தமிழ் வளர் முல்லை வள நாட்டில் ஒரு பகல்......,

[என்று எம்பிரான் கூறவும், முனிவரன்முன் ஒரு தோற்றம் எழுந்தது. எழுந்த தோற்றத்தின்கண் நிகழ்ந்தவற்றை இனித் தொடர்ந்து மகிழ்வோம்.]

காட்சி—2

ஆயர்பாடி—குறுங்காடு

நண்பகல்

[முல்லை நிலத்தில் ஆயர்பாடி என்றவொரு நாடுளது. **ஜெயநந்தன்** என்னும் பெயருடைய செங்கோல் மன்னன் அந்நாட்டைக் காத்து வந்தான். அவனுக்கு ஒரு மகன். **கௌமாரநந்தன்** என்பது அவன் பெயர். கல்வியொடு கேள்வியும், எழிலொடு தோள்வலியும் ஒருங்கே அமையப் பெற்றவன்.

அவன் ஒரு பகல் தனது நண்பனான சுதாமன் என்பானுடன் வேட்டையின் மேற் சென்றான். காடும் மலையும் நெடிது சுற்றியும், வேட்டைக்குரிய மிருகங்கள் நேரவில்லை. ஆகவே, சலித்த மனத்துடன் அவன் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து இளைப்பாறினான். அவனது குதிரை ஒரு புறம் புல்மேய்ந்து கொண்டிருந்தது. அவ்வேளை அவனது வலக் கண் துடிக்கவே, 'எந்நலம் நெருங்குதற்கு உளது,' என்று சிந்தித்தவனாய் வீற்றிருந்தான்.

உடன் வந்த நண்பன் சுதாமன் என்பான் இளவரசனுக்குத் தெரியாமல். அருகிருந்த புதரொன்றில் மறைந்துகொண்டு அதை அசைத்தான். புதர் அசைவதைக் கண்ட இளவரசன், விலங்கொன்று அங்கே ஒளிந்திருப்பதாகக் கருதி வில்லை

வளைத்தான். உடனே சுதாமன் அயலிருந்த வேறோர் புதரை ஆட்டினான். புதரசையும் திசை நோக்கி, இளவரசன் குறியெடுக்கக் கண்ட சுதாமன், கலகலவென்று சிரித்துக்கொண்டு புதரிலிருந்து வெளியே வந்தான்.]

சுதாமன் : *நில் நில் நண்பா, நில். இல்லை, உனது வீரக்கணைக்குச் சிறிது விளையாட்டுத் தந்தேன்.*

கௌமாரன் : *விளையாட்டா தந்தாய்! ஆம், உனது விளையாட்டு வினையாய் முடிந்தது, நான் வருந்துகின்றேன்.*

சுதாமன் : *வருந்துகின்றாயா? ஏன் நீ வருந்தவேண்டும்?*

கௌமாரன் : *ஒரு நண்பனை இழக்க நேர்வதால் ஏற்படும் வருத்தந்தான். பூட்டிய இக் கணைக்குக் குறி நீ தான்!*

சுதாமன் : *குறியா,...நானா! (அஞ்சி ஒரு புறம் ஒதுங்கி) இல்லை, அது பொய்; நண்பா, அதுதான் பொய். என் ஜாதக பலத்தை நீ அறியாமல் பேசுகின்றாய். என் தகப்பனார் சோதிடர்; என் பாட்டனார் இன்னும் பெரிய சோதிடர்; இவர்களும், வேறு இரண்டு பால சோதிடர்களுமாய்ச் சேர்ந்து எனக்குப் பூர்ணாயுள் என்று முடிவு கட்டி யிருக்கிறார்கள். அவர்கள் வாக்கும் என் ஜாதக பலமும் ஒரு புறமிருக்கட்டும், என் மனைவி யிருக்கின்றாளே, பெருந்தேவி, அவள் மாங்கல்ய பலத்தை அசைப்பதற்கு—கடவுள் கிடக்க - பிசாசு பூதங்களினாலும் ஆகாது என்று பேர்பெற்ற சோதிடர்கள் கூறியிருக்கின்றார்கள்......மேலும் சாகின்ற உத்தேசம் எனக்கும் இல்லை!*

[இளவரசன் வளைத்தவில் நிமிராதிருப்பதைக் கண்ட சுதாமன், இன்னும் சிறிதுவிலகி ஒரு புறம் நோக்கினான். இளமான் ஒன்று அச்சத்துடன் விரைந்தோடி வந்தது. அதைக்கண்ட சுதாமன் களிப்பு மிகுதியால் துள்ளிக் குதித்தான்.]

கௌமாரன்: ஏனடா துள்ளிக் குதிக்கின்றாய்? களிப்புக் கைமிக என்ன கண்டுவிட்டாய்?

சுதாமன்: கண்டேன்...சோதிடம் பலித்தது என்று, என் முன்னவர் முயன்ற சோதிடம் ஒருநாளும் பழுதடையாது என்று.

கௌமாரன்: அது எப்படியோ?

சுதாமன்: வில் வீரனே, தப்பினேன். அதோ பார், ஒருமான். அதோ, அதோ,...!

கௌமாரன்: நன்றே ஆயது! சுதாமா, தலைதப்பினாய்!

[விரைந்தோடும் மானை குறியாக இளவரசன் படுகணை யொன்று போக்கினான். மான் அலறிக் கொண்டு தரையில் விழுந்தது.]

சுதாமன்: ஹா! விழுந்தது மான்! யாருக்கும் எத்தீங்கும் இழைத்தறியா இளமான்!...(வியப்புடன்) இளவரசே, இன்னொருமான்! வில்லொன்று ஏந்தி விரைந்து வருகின்றது!

கௌமாரன்: (அத்திசை கூர்ந்து நோக்கி) மானன்று, மயிலடா; அது பறந்து வருகின்றது!

சுதாமன்: ஆம் நண்பா, ஆம்; அது பெண் மயில். அதிருஷ்டசாலிதான் நீ. இனித் தொடரும் வேட்டையில் எனக்கு இடமில்லை. நண்பா, நான் போகின்றேன்.

[இப்படி சுதாமனும் கௌமாரநந்தனும் அசதியாடிக் கொண்டிருக்கையில் கையில் வில்லும், அரையில் வாளும் தாங்கி விரைந்து வந்த தாக்கணங்கு அனைய நங்கை, தரையில் வீழ்ந்து கிடக்கும் மானையும் அதை வதைத்த அரசிளங்குமரனையும் மாறி மாறி நோக்கினாள். அவள் கண்களில் சினம் பொங்கி யெழுந்தது. இளவரசன் வியப்போடு அவளை நோக்கிய வண்ணம் நின்றான்.]

கௌமாரன் : சுதாமா, இன்று நாம் விழித்த முகம் நல்ல முகம்!

சுதாமன் : அதுதான் இல்லை. இப்பொழுதே வீட்டிற்குத் திரும்பி விடுவோம். ஐய, இது மானுமன்று, மயிலுமன்று: பெண்சிங்கம். அது பாய்ந்துவிடும், வா!

[சுதாமனது சொல்லும் அழைப்பும் இளவரசனின் செவிசேரவில்லை. தன் முன் நிற்கும் பெண்ணின் மேல் விழிவைத்தவனாய் நின்றான். அப் பெண் ஆயர்நாட்டின் படைத்தலைவனான சூரசிம்மனின் ஒருமகள். பிள்ளையில்லாக் குறையை வாய்த்த இப் பெண்ணினால் தீர்த்துக்கொள்ள எண்ணிய தந்தை, அவளுக்குப் படைக்கலப் பயிற்சியும் யானையேற்றமும், குதிரையேற்றமும் பயிலுவித்தான். இரும்பு பிடித்தவன் கை சும்மாயிராதல்லவா? இப்பெண், தான்கற்ற வித்தையைச் சோதித்தறிய எண்ணித் தனது தோழியர் சிலருடன், கன்னிமாடங்கடந்து கானகமடைந்தாள். அடைந்த காட்டில் ஒரு மான் எதிர்ப்படவே, அதனைத் தொடர்ந்தாள். ஆனால் அந்த மான்

இளவரசன் கையால் மாண்டது. ஒருவர் தொடர்ந்த விலங்கை வேறொருவர் அடிப்பது வேட்டை விதியின்படி பரிபவம் செய்தது ஆகும். ஆகவே அவள் சினங்கொண்டாள். அவள் பெயர் மாயாவதி.]

மாயாவதி : இதுவோ ஐய, நீ கற்ற வேட்டைமுறை! என் வில்லைப் பழித்தாய்! இப்பழி யகல ஒன்று புரியாது விடேன். எனவே வாளை உருவுவாய்!

கௌமாரன் : மாதே, உன் குலுங்குவது வளையல் என்பதை மறந்தனை போலும்!

மாயாவதி : வீரனே, வளையேபோல் வாளையும் ஏற்கும் இக்கரம். அதனை இப்பொழுது சோதித்துவிடலாம். ஏன் ஐயா நிற்கின்றாய் ?

கௌமாரன் : அடி என் வீர மகளே! வீணையோடு வாளை நீ மயங்குகின்றாய். அது, தளிரனைய நின்கரத்தின் மென்மையைக் குலைத்துவிடும் ?

மாயாவதி : நில் ஐய, வாட்போர் வேண்டுகின்ற எனக்கு நீ வாய்ச்சொல்லே வழங்குகின்றாய். ஆடவனே, இதுவோ நீ அறிந்த வீரம்.

சுதாமன் : (இடைப் புகுந்து) பெண்ணே, பொறு! பொருந்தா உறவு கொண்டுள்ள உன் வாளின்மேல் ஆணை. என் நண்பன் வேட்டை விதி பிழைத்தான் என்னில், நீ போர் விதி பிழைக்கின்றாயே!

மாயாவதி, என்ன? போர் விதி பிழைக்கின்றேனா?

சுதாமன் : ஆம், போருக்கும் விதியுண்டு. மத்தியஸ்தத்திற்கு ஒருவரை நியமித்த பிறகு அல்லவா போர் துவக்க வேண்டும்? அந்த வேலையை நான் ஏற்றுக்

கொள்ளுகின்றேன். சுத்த வீரன் நான், தகுதியுடைய வனே. இந்த நாட்டில் தூக்கம், ஓட்டம், சாப்பாடு ஆகிய கலைகளில் என்னை வென்றவர் ஒருவர் இல்லை. அது இருக்கட்டும். பெண்ணே! உன் கண்வேல் பாயக் கலங்கி நிற்கும் என் நண்பனை, கைவாள் நீட்டி வெருட்டுவது பெண்மையுமன்று, வீரத்தின் பெருமையும் ஆகாது. ஐயா இளவரசே! வா, நாம் போய்விடுவோம். கோலேந்த இருக்கும் உன் கரத்தில் இக்கைகேசி வளையூட்டி விடுவாள். பின்னர் நீ மடைப்பள்ளி மாதவனாய் முடிய நேரிடும். வா, வீடு நோக்கி விரைந்திடுவோம்.

[சுதாமனின் கூற்றினால், தன் முன் நிற்கும் செம்மல் ஆயர்பாடியை வாழ்விக்க வந்த இளங்கோ வென் றறிந்த மாயாவதி நாணி ஒரு சிறை ஒதுங்கி நின்றாள். வாள் கை சோர்ந்து தரையில் வீழ்ந்தது. வந்தணைந்த பெண்மை அவள் வீரத்தை விழுங்கி விட அவளது அஞ்சனக் கண்கள் தரை நோக்கின.

மின்னுருக் கொண்டனைய தோற்றத்துடன் எதிர் நிற்கும் பெண், "தாய் வயிற்றில் பிறந்த பெண்ணோ, மற்று இக்கானம் உறையும் தெய்வ மங்கையோ!" என்று இளவரசன் அயிர்க்கலா னான். "மானிடப் பெண்ணாயின் இவ்வேளையில் வில்லுடனும், வாளுடனும் இக்காடு போந்ததேன்? —என்ற கேள்விக்கு விடைதெளிய அவனால் இயலவில்லை.

இந்நிலையில், அவள் மானிடப் பெண்தான்,—என்று தெளிவதற்கான குறிகள் சில அவள்பால் தோன்றலாயின. அவளது குவளைக் கண்கள்

அவனைக் களவில் நோக்கின. அப்பார்வையில் விருப்பக் குறி தோன்றிற்று. எதிர் நிற்கும் இளவலை நோக்குவதும், அவன் நோக்குங்கால் தரை நோக்கிப் புன்முறுவல் கொள்வதும், கைவளை திருத்துவதுபோல் அதனிடம் தோன்றும் இளவலின் பிரதிபிம்பத்தைக் கண்டு மயங்குவதும் ஆகிய குறிகள், 'அவள் காதலால் தன்னையே துறந்து நிற்கின்றாள்,' என்பதைப் புலனாக்கின.

இவையனைய குறிகளால், இவ்வடவி காக்கும் அறமகள் அல்லள் இவள், என்று கோமகன் தெளியவே, அவன் இதுவரையில் அடக்கிக் காத்த வேட்கை யெல்லாம் பொங்கி எழுந்தது. அவளை நெருங்கி, அவளோடு உறவு கொள்ள விழைந்தான். வழியொன்றும் தோன்றவில்லை. கருத்திலா வழி நாற்புறமும் நோக்கினான்.]

சுதாமன்: அரசர் குலம் வந்த வீரனே,! ஏனிப்படி விழிக்கின்றாய்? என்ன நேர்ந்து விட்டது? இருக்கட்டும், நாம் வந்தது வேட்டையாடவா, அல்லது வேட்டைக்கு ஆளாகவா?

கௌமாரன்: நண்பா! வேட்டைக்கு ஆளாவதே, இப்பொழுது எனக்குச் சுவையுடையதாகத் தோன்றுகின்றது.

சுதாமன்: தோன்றும், அப்பா தோன்றும்! பித்தம் தலைக்கேறினால் ஏன் தோன்றாது?

கௌமாரன்: இல்லையடா, என்னைப் பற்றியிருப்பது ஓர் உவகை. என்றும் நான் கண்டிராப் புதுமையும் இனிமையும் உடையது அது. அது என் உள்ளத்தில்

கடலெனப் பொங்கிப் புரள்கின்றது. இன்று எனக்கு இவ்வுலகமே இனிமையின் வடிவம். அதன் பயன் எல்லையற்ற சாந்தி. துறந்தவர் முயன்று தேடும் அது இன்று எனதாயிற்று. வாழி, இவ்வுலகம்!

சுதாமன்: துறந்தவர் முயன்று தேடும் சாந்தியை உனதாக, இந்திரஜாலம்போல் இசைத்துக்கொண்ட நல்ல என் முக்தனே! இந்த உலகத்தை வாழ்த்தி வாழ்த்தி என் தலையைத் தரையில் உருட்டிவிடாதே. கௌமாரா, நான் சொல்வதைக் கேள். என் பொறுப்போ பெரியது. என் புத்தி, வயது, அனுபவம் முதலியவைகளை அறிந்த உன் பெற்றோர் உன்னை என்னிடம் ஒப்படைத்திருக் கின்றார்கள். வா, வீடு போவோம். உனக்குப் புண்ணியம் உண்டு. உன்னை யுன் பெற்றோர்களிடம் சேர்த்துவிட்டு, இப்பொல்லாப் பொறுப்பினின்று என்னை விலக்கிக் கொள்வது அவசியமாகின்றது. வரமாட்டாயா? நீ...... அடங்காப் பிள்ளை யென்பதை அறியாமற் போனேன்.

கௌமாரன்: சுதாமா, என் உள்ளத்தின் நிலையை நீ எப்படி அறிவாய்?

சுதாமன்: எல்லாம் அறிவேன். இந்த இளம்பிரா யத்தை நானும் ஒரு நாள் உடையவனாய் இருந்தேன். என் பெருந்தேவியும் பதினாறுண்டுப் பெண்ணாய் இருந்த துண்டு. ஆனால், எங்கள் பெரியோர் செய்த புண்ணியத்தால் எனக்குப் புத்தி இருந்தது.

கௌமாரன்: நண்பா, உன் விளையாட்டிற்கு இது நேரமில்லை. அதோ பார், அஞ்சனக் கண்களால் என்னைக் களவாடும் அப்பெண்ணைப் பார். நான் நோக்காக்கால் என்னை நோக்குகின்றாள். நான் நோக்குங்கால்.........!

சுதாமன்: உனது பேதைமையைக் கண்டு தரை நோக்கிச் சிரிக்கின்ருள்! இதை நான் பார்க்கவேண்டுமோ! என் மானம் போகின்றது!

கௌமாரன்: போவதற்கு உனக்கு ஒரு மானம் இருப்பது அறிய மகிழ்கின்றேன்! என் உள்ளத்தை இனிமை சேர் அமைதியில் ஒரு பார்வையால் இசைத்தருளிய குவளைக் கண்களே, வாழி!

சுதாமன்: ஐயா, வாழ்த்தியதுபோதும். அக்கண், —நீ வாழ்த்தும் அக்கண்,—கண்டவரைக் கொன்றழிக்கும் எமன். அதைப் பெண் என்று மயங்காதே. பெண்ணுயின் இந்நடுக்காட்டில் இவ்வேளையில் வேலினும் கூரிய கண்களுடனும், பெண்மையொடு பொருந்தாத வாளுடனும் வருவானேன்? அது பொல்லாத மோஹினி! அது வீசியுள்ள வலியில் வீழ்ந்துவிடாதே. அது உன்னைப் படுநாசமாக்கிவிடும். ஆம், சொன்னேன்!

கௌமாரன்: மூடனே, போ. அறிவுடைய எந்த ஆண் மகனும் இந்த மோஹினியின் வலையிற்பட விரும்புவான். வேண்டுமெனின், நீ வீடு செல்லலாம்.

சுதாமன்: உன்னை விட்டு விட்டா? ஏன், என் தலை இன்னும் சிறிது காலம் என் கழுத்தொடு பொருந்தியிருப்பதில் உனக்கு இஷ்டமில்லையோ? என் பெருந்தேவியின் தாலி உன் கண்ணைக் கரிக்கின்றதோ! என்ன செய்வேன் நான்! இந்த அரசர்களோடு கொள்ளும் பழக்கம் எப்பொழுதும் ஆபத்துத்தான். கடவுளே !......அம்மா, உன்னைக் கும்பிடுகிறேன். நீ இந்த வனத்தின் அதிதேவதையோ, அல்லது ஆடவரைப் பிடித்து ஆட்டும் மோஹினியோ! நீ யாராயிருந்தாலும் சரி, போய் விடு. இவன் சிறுவன், அறியாத

வன், அரசனுக்குப்பின் இந்த ஆயர் பாடியைக் காக்கும் பொறுப்பையுடையவன். அவன் அறியாமையினல் ஏதாவது செய்திருந்தாலும் மன்னித்து விடு! மாதே! இந்த என் தலையிருக்கின்றதே, தலை, அது...இது வரையில் யாரையும் வணங்கி யறியாத தலை. பெருந்தேவியைக் கூட வணங்கியதில்லை. அந்தத் தலையால் உன்னைக் கும்பிடுகின்றேன். நீ போய் விடு. பொங்கலிட்டுப் படைப்பேன். ஆடு கோழிகள் வேண்டுமாஞலும் சொல். நான் பிராமணன் பலியிடுதல் எங்கள் தர்மத்திற்கு விரோதமானது. இருந்தாலும் உன்னைத் திருப்தி செய்வதற்கு எதையும் செய்வேன். போய் விடு. ஆயிரம் வருவதாஞலும் இனி இக்காட்டின் பக்கம் நான் வரமாட்டேன். போ, போ, போய் விடு; எங்கள் கண்ணகன்று போய் விடு.

கௌமாரன் : ஏயே, பித்தனே! என் செவி சுடுகின்றது உன் பிதற்றல்......

சுதாமன் : என் உள்ளம் சுடுகின்றது உன் செயல். செல், என்கிருயே, எங்கே செல்வது? இந்த நடுக் காட்டில் என்னை இழுத்து வந்து நிறுத்திவிட்டு, என்னைப் போவென்று வெருட்டுவதோ நட்பு! கௌமார, சூரியனும் மேற்கே சாய்ந்து விட்டான். உன் அன்னையும் தேடுவார். மேலும் நண்பா, எனக்குப் பசிக்கின்றது.

கௌமாரன் : பசிக்கின்றதா! நல்லது, அங்கே அம்மரத்தடிக்குப்போய் உன் கவந்தப் பசி தீரும் வரையில் புல்லையும் தழைகளையும் மேய்ந்துவிடு.

சுதாமன் : மாடா, நான்? என் பெருந்தேவி கூட இப்படி என்னைச் சொன்னதில்லையே. இளவரசனுயிருந்தால் நாக்கை நீளும் வழி விட்டு விடலாம் போலும்!

கௌமாரன்: *முண்ட அபஸ்மாரமே, என்னைப் பொறுமையிழக்கச் செய்யாதே. என் கண் மறையப் போய் விடு. போகின்ருயா, இல்லையா?*

சுதாமன்: *இந்த அரசர்களை நம்பினால், மண்ணும் புல்லும் கடுஞ் சொல்லுந்தான். பெருந்தேவி! நீயே மேலடி! (ஒரு புறம் அகல்கின்ருன்).*

கௌமாரன்: *(மாயாவதியை நெருங்கி) நல்லாய்க் என் வாழ்க்கையை இனிமை சேர் நன்மையில் இசைத்தருளிய செல்வியே! நல்வினையுடையேன் நான்.*

[காதலால் தன் வயம் தளர்ந்திருந்த மாயாவதி இப் பொழுது மயக்கம் தெளிந்தவள் ஆனுள். தனக்கும் இளவரசனுக்கும் இடையேயுள்ள தூரத்தை உணர்தாள். "என்பெரும் பெண்மையை எனக்களித்த பெம்மான், அப் பெண்மைக்கு ஒரு தலைவனுய் அமைய இயலாமல் என் புன் பிறப்பு இடை நின்றதே!" என்று ஏங்கவும் அவள் யாக்கை யடங்கலும் குலுங்கலுற்றது. இரண்டடி பின் விலகித் தன் நிலைக் குரிய தாழ்மையுடன் இளவரசனை வணங்கினுள்.]

மாயாவதி: *கொற்றவா! எளியள் நான் அறியாது வாட்போர்க்கு அழைத்த இப்பிழையைப் பொறுத்தருள்வாய். வேந்தர் குலம் வந்த செம்மல் நீ என்பதை அறியேன்.*

கௌமாரன்: *என் புண்ணியம் கூட்டிவைத்த பாவையே! நீ எப்பிழையும் இழைத்ததில்லை. நிற்க, ஒன்றுநான் அறிய விரும்புகின்றேன்......*

மாயாவதி: *உன் விருப்பத்தின் வழி உவந்து செய்வேன்.*

கௌமாரன் : உன் தன்மைக்கு ஒவ்வாத திண்மையும், உன் தகுதிக்கு ஒவ்வாத செய்கையும் உடைய நீ யாவள் ?

மாயாவதி : நீ புரக்கும் இப்பதி வாழும் ஓர் ஏழை.

கௌமாரன் : நல்ல என் ஏழையே ! உன்னைக் குறிப்பதால் பெருமை யுற்ற பெயர் யாதோ ?

மாயாவதி : பெற்றவர் தொட்டிலில் இட்ட பெயர் மாயாவதி.

கௌமாரன் : சொல்லச் சுவைக்கின்றது இத்திருப் பெயர். உன்னைப் பெற்றதால் நற்றவமுடைய பெரியவன் யாவன் ?

மாயாவதி : உங்கள் குலப் பணியாள் என் தந்தை.

கௌமாரன் : பணியாளா ! யாவன் அப்பெருமகன் ? அவனைக் கண்டு நல்ல என் வணக்கத்தைச் செலுத்த விழைகின்றது என் மனம்.

மாயாவதி : உங்கள் படைத்தலைவன் ; அவன் மகள் நான்.

கௌமாரன் : சூரசிம்மன் மகளா நீ! எனின், நெருங்கினவர்களானோம்! மாயா, எல்லாம் நன்றே ஆயது. வா, தன் நல்லுயிரையே வழங்கி நம்மைக் கூட்டி வைத்த அந்த இளமானை அடக்கம் செய்வோம். (நெருங்கி மாயாவதியின் கரத்தைப் பற்றினான். அயல் நின்ற தோழிமார் அகன்றனர்)

மாயாவதி : ஐயா, என்னை விட்டிடு. (ஒரு சிறை ஒதுங்கிக் கண் புதைத்து நின்றாள்)

கௌமாரன் : நாணினையோ, நங்காய் ! அது, உன் பெரும் பெண்மையொடு பொருந்தியதே. ஆனால் நீ

வைத்த நோயால், இப்பொழுது நான் வருந்துகின்றேன். நீ கண் புதைத்து நிற்பதால் என் வருத்தம் தீர்ந்தபடியாகாதே. கருணையுளதேல் என் கண்ணைப் பொத்திவிடு; என் துயர் தீரும். (அவளது இரு கரங்களையும் வேட்கையொடு பற்றினான்.)

மாயாவதி; (அவன் பிடியினின்று தன்னை விலக்கிக் கொண்டு ஒதுங்கி) பெரும, கதிரவன் மேற்றிசை நெருங்குகின்றான். பொழுதுபடுமுன் அடவி நீங்கி நான் கன்னிமாடம் சேரவேண்டும்.

கௌமாரன் :—ஆம். என்னருந்தாயும், சிறிது சிந்தை கலங்குவாள். வா, நாம் போவோம். கன்னிமாடம் வரை மெய்க்காவல் பூணும் பாக்கியம் எனதாகட்டும்.

மாயாவதி : அரசே, வேண்டா; என் தோழியர் உளர். இக்கானிடை வந்ததேபோல், தனித்தனி நாம் பிரிந்து போதலே முறை.

கௌமாரன் : பெண்ணே, இனி உனக்கு நான் அரசன் அல்லன். நான் தரும் உறவு பெரியது. உன் காதலன்; இனி அவ்வழி அழைத்தலே என்னை மகிழ்விக்கும்.

மாயாவதி : வள்ளலே! நீ அருளும் உறவினை ஏற்பதற்கு விதியில்லையே என்று தான் வருந்துகின்றேன்.

கௌமாரன் : ஏனில்லை!

மாயாவதி : ஏழையேன் நான் அணுகுதற்கில்லா ஒரு கோமகன் நிலையினில் நீ உயர்ந்து போயதால்.

கௌமாரன் : நான் அரசனா யிருப்பதே இடையூறுயின், அதனையும் துறப்பேன். இவ்வடவியே வாழிடமாக நாம் உறைவோம்.

மாயாவதி : கண்ணில்லா வேட்கையால், கொற்றவா, நீ வாய் வந்தன பேசுகின்றாய். என்னை மறைந்து விடுவதே முறை.

கௌமாரன் : பெண்ணே, இப்பாடிக்கு அரசன் ஜய நந்தனின் ஒரு மகன் நான். வழங்குவதை யல்லால் வேறொன்றும் அறிந்திலா நான் இன்று ஏழையாய் உன்னை இரக்கின்றேன்! மாதே, இல்லை என்றோது ஈவதே பெருமை.

மாயாவதி : மன்னவா! மறுப்பதும் சிலபோது மான முடையதாகலாம். (இங்ஙிலையில் அவள் கண்கள் நீரைப் பெருக்கின).

கௌமாரன் : மாயா, ஏன் அழுகிறாய்? நான் இழைத்த பிழை யாது? உன் கண் கலங்குமேல் என்னுள்ளம் இருண்டுவிடும்!

மாயாவதி : பிழையின் பெயரையும் அறியாக் குலத் துதித்த பெரியோய்! நான் பெண் பிறந்த பிழையுளது உனக்குத் தொண்டு பூண்டொழுகும் ஒரு சேவகனின் மகளை நீ மறப்பதே அமையும். கோமகள் ஒருத்தியே உனக்கு உரியவளாவாள்.

கௌமாரன் : பெண்ணே, இச் சொற்களால், எனக் கும் என் குலத்திற்கும் வசையே வழங்குகின்றாய். என் கோப் பெருந் தந்தையின் பெருமையை நீ அறியமாட் டாய். என் நெஞ்சம் நாடிய காதலை என் அன்னையும் வஞ்சிக்க நினையாள். மேலும், மாயா, உன் தந்தையும் கீழ்க்குடிப் பிறந்த ஓர் ஏழை அல்லனே!

மாயாவதி : உங்கள் ஏவலில் அமர்ந்த ஒரு வீரன். அவன் மகளை மருகியாகக்கொள்ள வேந்தர்பிரான் உன் பொருட்டு ஒரு வேளை இசைந்தாலும் மற்றவர் கொள்

ளார், உனது அன்னையும் பின்னொருநாள், என்னைக் காணுந்தோறும் நாணவும் நேரலாம். இந்த நாடும் எம்மைப் பழிக்கும். என்னைப் பெற்றெடுத்த பெரியவர்க்குப் பழி தேடிவைக்க நான் விரும்பமாட்டேன்.

கௌமாரன் : சீரிய காதலால் ஒன்றியவர் நாமாயின் வேறு சிலர் சொல்வதையும் நினைப்பதையும் நாம் கருதுவானேன் ? மேலும் பழி பேசும் நாவும் என்னாணையால் பொசுங்கிவிடும்.

மாயாவதி : அரசே, உலக இயலை நீ மறந்து பேசுகின்றாய். நீயும் ஒரு நாள், "மாதுலன் ஒரு மன்னன் அல்லனே" என்று,... ஆம், மனங்கசிய நேரலாம்.

கௌமாரன் : பெண்ணே, நஞ்சு பூசிய சொற்களால் என்னை வருத்தவேண்டுமென்பது உன் கருத்தோ ! இல்லை, ஒரு வேளை என்னைச் சோதிக்கின்றனையோ ? எனின், சோதனை கடந்தது என் காதல் என்பதை நல்ல என் செல்வியே, உனக்கு எப்படி நான் மெய்ப்பித்துக் காட்டுவேன் !

மாயாவதி : இறைவா, சோதனை ஒன்றும் இல்லை. மெய்யேதான் கூறுகின்றேன். என்னையுந்தான் நான் எப்படி நம்புவது ! நிலைமாறி மணந்ததால் அந்தஸ்த்தில் உயர்ந்த உன் சுற்றத்தைக் காணுங்கால் நான் நாணி மனங்குழம்பலாம். அவர் சொல்லும் செயலும் குறித்திலா நிந்தனைகளெல்லாம், அவர் என்பால் வழங்கியதாக எனது குழப்பத்தால் நினைத்துக்கொண்டு, நான் வருந்தவும், அதனால் உன் நல்வாழ்வு குலையவும் நேரலாம். ஆதலால், அண்ணலே......

கௌமாரன் : ஆதலால் என்ன......

மாயாவதி: ஆதலால் அன்ப, உன் வாழ்விற்கு இடையூறாய் நான் அமைய விரும்பவில்லை. என்னை மறந்துவிடு. அடுத்த பிறவியிலாவது ஒத்த நிலையில் உன்னைப் பெறுவதற்கான தவத்தைச் செய்வதில் எஞ்சியுள்ள என் காலத்தைக் கழிப்பேன். கொற்றவா, எம்மை என்றும்போல் அடிமையாக ஆட்கொள்வதே அமையும்.

கௌமாரன்: பெண்ணே, என் நல்வாழ்வு குலைத் தாய். இல்லை, உன்னைப் பழிப்பானேன். என் பொல்லா விதி இடையிற் கிடக்க ஒருவரைப் பழிப்பதில் ஏது பயன்? மாயா, உன் மதிப்படியே செய். ஆனால் ஒன்று கூறுவேன். நீ இன்னும் உன்னைச் சோதித்துத் தெளிந்துகொள்ளவில்லை. உன் கூற்றின் அடியில் கரைந்துறைவது சுயநலச் சிந்தனை. நன்று, நான் வருகின்றேன்.

[இன்னபடி கூறிவிட்டு, இளவரசன், தன் குதிரை நிற்குமிடம் நோக்கி நடந்தான். இதைக் கண்ட மாயாவதி திகைப்புக் கொண்டவள்போல் சிறிது நின்றாள். பின்னர் இளவரசனை மெல்லத் தொடர்ந்தாள்.]

மாயாவதி: அண்ணலே, நில்.

கௌமாரன்; வாடும் என் உயிரினைத் தளிர்க்கச் செய்ய, வருதியோ!

மாயாவதி: பெரியோய் என்னைப் பொறுத்தருள்வாய். என் பெண் புத்தியால் ஏதோ நினைத்து மோசம் போனேன். 'நீ வருந்த நான் காரணமாயிருத்தலாகாது, என்ற எண்ணமே, வள்ளலே, நீ வழங்கிய உறவினை

மறுக்கத் தூண்டியது. அப்படிச் செய்வது மானமும் வீரமும் ஆகும் என்று கருதினேன். ஆனால் இப்பொழுது, மாசற்ற உன் அன்பின் எதிர், அதன் புன்மை விளங்கலாயிற்று.

கௌமாரன் : எனின், மாயா, செய்தவம் உடையேன் நான்.

மாயாவதி : ஆம், புனிதமுடைய உன் அன்பினால், என் காதல் தன்னையே சோதித்துத் தெளியலாயிற்று. "மன்னவன் மைந்தனை இச்சிறு குடிப்பிறந்த மடமகள் வஞ்சித்து விட்டாள்," என்ற சொல் நேரலாகாது என்று இதுகாறும் அஞ்சினேன். எனது அச்சத்தின் ஆழத்தில் கரந்துறைந்தது செருக்கே. சுயநயச் செய்தியில் மிக மிக நுட்பமான இதனைக் காதலின் தியாகம் என்று மதித்தேன். இப்பொழுது உண்மை விளங்கிற்று. எனது இறையே, தூய உன் உறவு இல்லாக்கால், எனது மயக்கம் தெளிந்திராது. என் சிறு குலத்தை வாழ்விக்க வந்த வள்ளலே!......(மேலொன்றும் கூறமுடியாமல் கண்ணீர் பெருக்கி நின்றாள்)

கௌமாரன் : என் நெஞ்சின் நிறைவே, மாயா அழாதே. (இவனும் கண் கலங்கினான்)

மாயாவதி : அன்ப, இதோ தந்தேன், ஏற்றுக்கொள். நானும் எனதுயிரும், எனது பழுதற்ற பெண்மையும், குலத்தொடு மானமும், எல்லாம் இனி உனதே. இயைந்தபடி செய்வாய். (இளவரசன் திருவடி பணிந்தாள்)

கௌமாரன் : எனின் உய்ந்தேன். இன்னபடி இவ்வுலகில் யார் கொடுத்தார்!

[தன் தாள் பணிந்த பொன்னை இளவரசன் வாரியெடுத்து மார்புறத் தழுவிக்கொண்டான். இத்

தூயவர் காதல் இடையூறிலாவழி நடத்தலை விதி விரும்பவில்லை போலும். பகைப் பறையின் முழக்கம் இவர் செவிசார்ந்தது. "மலை நாட்டுப் பகைவர் மாடுகளை மடக்குகின்றனர்," என்று கூவிக்கொண்டு ஆயர் எங்கும் ஓடினர்.

இவ்வேளை மாயாவதியின் வலக்கண் துடிக்கவே, அவள் அஞ்சிக் குழம்பினாள். சுதாமன் அலறிக்கொண்டு இவண் ஓடிவந்தான். அயல் அகன்றிருந்த தோழியரும், மாயாவதியினிடம் வந்து சேர்ந்தனர்.

தன் கடமையை உணர்ந்த காதலன், மாயாவதியை சுதாமனிடம் ஒப்படைத்து விட்டுப் பகையகற்றும் கருத்தோடு குதிரையேறி விரைந்து அகன்றான். நங்கையும் தோழியரும் தங்கள் தங்கள் குதிரைகளை அடைந்தனர். சுதாமனோ, தன் குதிரையைக் காணாமல் அங்கும் இங்கும் தேடினான்.

இந்நிலையில், நூற்றுக் கதிகமான தொகையுடைய பகைவர், மாடுகளை இவ்வழியாக விரட்டிச் செல்வதை மாயாவதி கண்டாள். கண்டதும் ஆவேசம் கொண்டவளைப்போல், குதிரையேறிப் பகைவரைத் தொடர்ந்தாள். இதைக் கண்ட தோழியர் திகைத்து நின்றனர். சுதாமன் ஓடிமறைந்தான்.

பகைவரை நெருங்கிய மாயாவதி, வாளே துணையாகப் பகை விலக்கச் செய்த முயற்சியெல்லாம் வீணாயிற்று. இறுதியில் பகைவர் கைப்பட்டாள் அவர்கள் மாடுகளை விட்டு, விட்டு இவளைக் கைப்பற்றிச் சென்றார்கள் மாடுகள் திரும்புவதைக் கண்ட தோழியர் ஒன்றும் விளங்காதவர்களாய் மனை நோக்கித் திரும்பினர்.]

காட்சி—3

ஊருக்குள் ஒரு வீதி
மாலை—நேரம்

[கால் அயரும் வரையில் ஓடிய சுதாமன், மேலே செல்ல முடியாத நிலையில், ஊருக்கு அருகாமையிலுள்ள ஒரு காட்டிடத்தில் ஒரு செடிமறைவில் ஒளிந்து கொண்டான். நாழிகை சிலசென்ற பின், இடைச் சிறுவர் மந்தைப் பாட்டுப் பாடிக் கொண்டு மாடுகளுடன் வீடுதிரும்பிக் கொண்டிருந்தனர்.

இதைக் கண்ட சுதாமன், "ஆயர் படைக்கு அஞ்சிப் பகைவர் மாடுகளை விட்டுவிட்டுச் சென்றனர்," என்று கொண்டு மறைவிடமிருந்து வெளிவந்தான். எங்கும் குழப்பமில்லாமல் அமைதியாய் இருக்கவே, அவனது அச்சமும் அகன்றது. ஊரை நோக்கி நடந்தான். வழியில் ஒரு வீதியின் கண் அவனது கிழப் பசு கண்ணிற்பட்டது. அதை ஓட்டிக் கொண்டு தன்மனை நோக்கிச் செல்கின்றான்.]

சுதாமன் : போடியம்மா, போ. பாவம், போராடி அயர்ந்து விட்டாய்! ஆம், அழகிய உன் வடிவம் மலை நாட்டுச் சோம்பேறிகளின் கண்ணைக் கவர்ந்துவிட்டது. உன்னைத் தனியாகப் பிடிக்க முடியாமல் அல்லவா அக் கயவர் மாடுகளை யெல்லாம் மந்தையாக மடக்கினர்கள்! உம், நடந்துபோ, தீனி தின்னலாம்.

[அவ்வழியே சென்ற இடைச்சிறுவர்கள் சிலர் இக்காட்சியைக் கண்டு சிரித்தவராய் நின்றனர்.]

ஒருவன் : புலவர் ஐயா, கால் பின்னுதுங்களே. பின்னே பிடித்துத் தள்ளட்டுமா ?

சுதாமன் : போடா மூடா! கலையழகை நீ என்ன கண்டாய் ? இந்த நடைதானடா புலவர் போற்றும் அன்ன நடை. இதனுடன் காக்கையும் சிலதினம் பழகினால், பின் அன்ன மென நடைபயிலும், தெரியுமா! (மேலே செல்கின்றான்)

மற்றொருவன் : ஓஹோ ! அன்ன நடையா ? தெரிஞ்சுதுங்க! இருக்கட்டும். சாமி, அப்பாலே விலகி நடவுங்க.

வேறொருவன் : மாடு கால் தாடுமாறி விழுந்தா, ஒங்க கால் கோவிந்தாதான் !

சுதாமன் : நீ வைத்தியம் பண்ணவரவேண்டா. ஏனடா, சிரிக்கின்றீர்கள். பல்லைத் தட்டிக் கையிலே கொடுத்து விடுவேன். பகைவர் பட்ட பாடு தெரியுமா ? என்னை யாரென்று நினைத்துக்கொண்டீர்கள் ?

[சுதாமன் தன் வீட்டை நெருங்கினான். புருஷனது குரலைக் கேட்டு அவன் மனைவி பெருந்தேவி வெளியே வந்தாள்]

பெருந்தேவி : எப்பொழுதும் யாரோடும் சண்டை தானா ? மாடும் வந்துவிட்டதா ? தீனியும் வைக்கோலும் மிச்சம் என்று நினைத்தேனே !

சுதாமன் ; மிச்சமா ? இதன் அருமை உனக்கு என்னடி தெரியும்! நமது ராஜாவின் தகப்பனார் காலமான போது கொடுத்த கோதானமடி இது. இன்னும் இரண்டு

மூன்று கன்று போடும். போகட்டும், மஞ்சள் நீர் கரைத்துவா?

பெருந்தேவி: யாருக்கு திருஷ்டி கழிக்க! இந்தக் கிழட்டு மாட்டுக்கா!

சுதாமன்: கண் தெரியவில்லை உனக்கு? ஏன், எனக்குத்தான்; வெற்றிப் பிரதாப வீர தீர விகட விநோத சுதாம சிங்கத்திற்குத்தான். என் தலையெழுத்து உன்னைக் கல்யாணம் செய்து கொண்டேன். இன்னும் என் பெருமை தெரியவில்லையே உனக்கு!

பெருந்தேவி: போதும் பிரதாபம்! எல்லாரும் சிரிக்கிறார்கள். வெட்கம் இல்லாத ஜன்மமாய்ப் படைத்தானே கடவுள்!

[இது சமயம் இளவரசன் இங்கே வந்தான். அவனைக் கண்டதும் பெருந்தேவி மாட்டை ஓட்டிக் கொண்டுஉள்ளே சென்றாள்.]

சுதாமன்: இளவரச மகாப் பிரபு, வரவேணும். க்ஷேமந்தானே!

இளவரசன்: சுதாமா, அங்கே ஒருவரையும் காணவில்லையே! எங்கே ஓடி மறைந்தாய்? மாயாவதி எங்கே?

சுதாமன்: ஓடி மறைந்தவன் நீயா நானா? பகைவர் போருடைந்து ஓடியபின் எனக்கு அங்கே என்ன வேலை? முதுகெல்லாம் புண்ணாக ஓடினார்கள்!

இளவரசன்: என்ன, சண்டை நடந்ததா?

சுதாமன்: சண்டையா? போர்! ஏன், மஹா யுத்தம்.

இளவரசன்: என்ன!

சுதாமன் : ஆம், நான் ஒருவன் : பகைவர் ஐந்நூறு பேர். முன்னே இருபது பேர், பின்னே இருபது பேர், இடது பக்கம் இருபது பேர், வலது பக்கம் இருபது பேர் இப்படி நூற்றுக் கணக்கில் என்னைச் சூழ்ந்து கொண்டார்கள்......!

இளவரசன் : விகடப் புலவா, உனக்குக் கணக்குப் புலமை அவ்வளவு போதாதென்று நினைக்கின்றேன்.

சுதாமன் : என்னைச் சூழ்ந்து கொண்ட பகைப் படையைக் கலக்குவேனா, அல்லது உனக்காகக் கணக்கு எண்ணுவேனா? நல்ல கேள்வி இது! வடசாரி இடசாரியாகச் சுழன்று பார்த்தால் ஆயிரத்திற்கும் அதிகமாகும். பம்பரம் சுழல்வதுபோல் சுழன்றேன்.

இளவரசன் : நீ சுழன்று தாக்கியவர் என்னானார்கள்?

சுதாமன் : என்ன ஆவது? கையையும் காலையும் நாக்கையும் மூக்கையும் வாள்கொண்டு சீவினேன்?

இளவரசன் : வாளா! எந்த வாளால் அப்பா.

சுதாமன் : வல்லவனுக்கு வாளொன்றும் வேண்டுமோ! முறுக்கு மெல்லுவதுபோல் நான் அவர்களை நொறுக்கிவிட்டேன்.

இளவரசன் : அங்கே, கைகளும் கால்களும் காணோமே!

சுதாமன் : அவைகளுக்கு நானா காவல்? எனக்கென்ன தெரியும்? அவரவர் கையையும் காலையும் அவரவரே கொண்டுபோயிருப்பார்.

இளவரசன் : ஏ வாய் வீரா, போதும் உன் பிதற்றல் மாயாவதி எங்கே?

சுதாமன் : வாள் வீரனே, உனக்குப் பின் அவளும் பயந்து வீட்டிற்கு ஓடியிருப்பாள்.

[வந்த பகை அகன்றது போல், மாயாவதியும் இனிதே கன்னிமாடம் சேர்ந்திருப்பாள் என்று இளவரசன் எண்ணினன். மறுபடியும் அவளை எங்கே காண்பது? எப்படிக் காண்பது? என்று யோசித்துக் கொண்டே அவன் இரவு பத்து நாழிகைக்கு அரண்மனை போய்ச் சேர்ந்தான்.]

காட்சி—4

அரண்மனையில் ஒரு மண்டபம்
இரவு

[அரசனும், மந்திரக்கிழவர் வித்யாநந்தரும் வீற்றிருக்கின்றனர். குலமுடைய வீரன் ஒருவன் அவண் போந்து அரசனை வணங்குகின்றான்.]

ஜயநந்தன் : நம் மக்களின் உயிருக்கோ, பொருளுக்கோ தீங்கு இலதே?

வீரன் : இறைவா, இல்லை. நின் செங்கோலே அரணாக வாழும் எம்மை, எத்தீங்கு சாரவல்லது ?

ஜயநந்தன் : வந்த பகை என்னாயது ?

வீரன் : வந்ததேபோல் விரைந்தகன்றது. மலைநாட்டுக்கொடியர் நம் பாடிக்குள் புகுந்ததை அறிந்ததும், உன் மைந்தனின் தலைமையில் அவர்களை எதிர்க்கச் சென்றோம். அக்கயவர் மாடுகளை விட்டு விட்டு எங்கேயோ ஓடி மறைந்தனர்.

ஜயநந்தன் : பின்னர், நும்மனை திரும்புவதே கருமம் என்று கருதினீர் போலும்?

வீரன் : இல்லை, பெரும! பகைவர் அகன்றுபோகவே, இளவரசனின் ஆணையின்படி, அவர்களது குதிரைகளின் காலடிச் சுவட்டைப் பற்றினராய்த் தொடர்ந்தோம்.

ஜயநந்தன் : தொடர்ந்து, அவர்கள் இனிதே ஊர் செல்ல வழிவிட்டுத் திரும்பினீர்களோ ?

வீரன் : நீ வெகுளின், உன்னையே புகலாகவுடைய நாங்கள் என்ன செய்வது! இறையே, இருளும் சூழ்ந்தது. மலையடிவாரத்தில் அவர்கள் அறிந்த குறுக்கு வழிகளையும் அந்தரங்கப் பாதைகளையும் பகலிலேயே நம்மவர் தெரிதல் இயலாது. ஆகவே,......

ஜயநந்தன் : ஆகவே, திரும்பினீர். நன்று! இளவரசன் எங்கே சென்றான்?

வீரன் : பகைவர்மேல் எம்மைச் செலுத்தியபின், அப்பெருமகன் எவ்வழி திருவுளங் கொண்டான் என்பதை நாங்கள் அறியோம்.

ஜயநந்தன் : உங்களை ஏவியதோடு தன் கடமை தீர்ந்தது என்று கொண்டனன் போலும் என் சிறுவன்.

[அரசனது உரையைக் கேட்டுக்கொண்டே இளவரசன் மண்டபத்துள் புகுந்தான்.]

கௌமாரன் : எந்தாய், கருமம் சிறியதென்று கருதினேன்.

ஜயநந்தன் : சமாதானம் கூறல் எளியதே. கருமம் சிறியதோ, பெரியதோ, மைந்த, நீ வசையே உற்றாய்.

கௌமாரன் : பெரியோய், பிழையெனில் சிறுவன் நான் அறியாது செய்ததாகும் அது. எனவே பொறுத்தருள்வாய். (மன்னவனைப் பணிந்து தரைநோக்கி நின்றான்.)

[இளவரசன் கண்களிலிருந்து நீர்த்துளிகள் உதிர்ந்தன. இதனைக் கண்ட வித்யாநந்தர் அவனை அருமையுடன் அழைத்துவந்து தன்னருகில் அமர்த்திக் கொண்டனர். பின்னர் அவனது உள்ளத்தை முகத்தின் வழி படிப்பவர்போல் கூர்ந்து நோக்கினர்.]

வித்யாநந்தர் : அரசே, மைந்தனை வெகுளாதே அரியதொரு பொருள் அவனது இளம் உள்ளத்தைக் கவர்ந்துள்ளது என்று நினைக்கிறேன். எனவே, சிறிது அயர்ந்துவிட்டான் போலும்.

ஜயநந்தன் : மைந்த, வருந்தேல். பூமி தாங்கப் பிறந்தவர் பொறுப்போ பெரியது. எவ்வேளையிலும், எந்நிலையிலும் கடமை மறத்தலாகா உன் பொறுப்பை என் மகன் நீ, மறக்க நேர்ந்ததே என்ற வருத்தத்தால், நான் சிறிது கடியலாயிற்று. நன்று, அமைச்சர்பிரான் கூறியது உண்மையாயின், உன் மனம் கவர்ந்த பொருளை நீ பெற்று மகிழுமாறு செய்வேன்.

[இளவரசன் நாணத்தால் தலைசாய்ந்து நிற்கின்றான். அவ்வேளை சூரசிம்மன் துன்பம் தாங்கிய முகத்துடன் அவை வருகின்றான்.]

சூரசிம்மன் : இறைவா, வாழி !

ஜயநந்தன் : (வியப்புடன்) எம் உயிர்த்துணைவா, கலங்கி யறியாத உன் முகம், ஏன் இன்று கலங்கியுளது ? என் நிகழ்ந்தது ? யாம் புரிவதற்கொன்று உளதேல் சொல்; உலோவாது முயல்வோம்.

சூரசிம்மன் : கொற்றவா, என் மகளை, எம் நற்றவம் வாய்த்த செல்வியை, எம் உயிரின் இருக்கையை.........! (கண்ணீர் விடுகின்றான்.)

ஜயநந்தன் : என் உற்றாள் அவள் ?

கௌமாரன் : எத்திங்கு நேர்ந்தது ? இழைத்தவர் யாவர் ? அவர் மடிந்தார்!

சூரசிம்மன் : யார் மடிந்தால் என்ன? என் நஷ்டமோ பெரியது. ஒருவர் இருவர் மடிவதால் அது ஈடு செய்த படியாகாது?

ஜயநந்தன் : சிம்ம, நீ சொல்வதொன்றும் எமக்கு விளங்கவில்லை.

சூரசிம்மன் : எம் மாமகளை, எம்குலத்தை விளக்கவந்த திருவை இழந்தேன். ஏந்தலே மலைநாட்டுக் கொடியர் அவளைச் சிறை கவர்ந்து சென்றனர்.......!

ஜயநந்தன் : ஆ கொடியோய்! நீ நாடுகாக்கும் திறம் நன்று. ஐய, வருந்தாதே. இன்றே இப்பொழுதே படையெழுந்து செல்வோம். திருவருளின் துணையுளதேல் நாளைச் சூரியன் மறைவதன்முன் உன் சிறுமியை நீ பெறுவாய்.

கௌமாரன் : எந்தாய், இக் கருமம் எனதாகட்டும். உன் பணியுளதேல் நானே படை நடத்திச் சென்று அக் கன்னெஞ்சரைக் கொன்றழித்து, அந்நாட்டையும் உருக்குலைத்துவிட்டு மீள்வேன்.

சூரசிம்மன் : யார் எது செய்தும் என்? என்வரையில் எப்பயனும் நல்காது. மானம் இழப்பதெனின் என் செல்வி உயிர்வாழத் தரியாள். அவள் சவத்தைக் கொணரவே நீங்கள் படையெழுந்து செல்லவேண்டும். அவள் மாண்டபின் நானும் என் மனைவியும் உயிர்வாழ மாட்டோம்!......மாயா! என் செல்வியே! அக்கொடியவர் கையினில் எவ்வாறு படுகின்றனையோ! கடவுளே, என் செய்வேன்! கிளியை வளர்த்துப் பாம்பின் வாய் இட்டது போலாயிற்றே! (உணர்வற்றுச் சாய்கின்றான்)

[இளவரசன் விரைந்து வந்து அவனைத் தாங்கித் தன் தோள்மேல் சார்த்திக்கொண்டான். பணிப்

பெண்கள் முகத்தில் பன்னீர் தெளித்துச் சாமரைகொண்டு வீசினர்கள். சிறிதுபொழுதில் படைத்தலைவன் உணர்வு பெற்ருன்.]

வித்யாநந்தர் : சார்பிலர் சிம்மமே, கலங்கித் தளராதே. என்னிடம் கற்றுத் தேறிய அச்செல்வியை நின்னினும் நான் நன்கறிவேன். அவளது மேன்மைசால் தூய்மையின்முன் தீங்கும் அஞ்சி அடங்குமெனின், வஜ்ரதரனும் அவனது ஆட்களும் என்ன செய்ய முடியும்? மகனே, அவளுக்கு எப் பழுதும் நேராது. பாஞ்சாலியின் மானம் காத்த ஒரு கடவுள் அவளைக் கைவிடான். எனவே படை திரட்டிச் செல்வதே முறை.

சூரசிம்மன் : பழுதில்லா நின்வாக்கு இன்று என் வயின் பலிக்குமேல், நானும் என்குலமும் உய்ந்தோம். பெரியீர், தேவரீர் ஆணையின்படி செய்வேன். அரசே, நான் படையெழுந்து செல்லப் பணித்தியோ?

ஜயநந்தன் : இல்லை ஐய, செய்வினை திருந்தச் செய்யவேண்டும். கைதவம் வல்ல அவ்வரக்கரை அடக்க நாம் போதிய படையுடனும் தக்க ஏற்பாட்டுடனும் செல்லுதலே முறை. நாளை உதயம் என் மகன் உன் தலைமையின் கீழ் படை நடத்தி வருவான்.

சூரசிம்மன் : கொற்றவா, என் வலத்தோள் துடிக்கக் காண்கின்றேன். நமது அமைச்சர்பிரான் வாக்கும், துடிக்கும்தோளும் எனக்கு நம்பிக்கையைத் தருகின்றன. நான் வீடு சென்று விரைவில் திரும்புவேன்.

ஜயநந்தன் : படைத்தலைவ, இல்லை. என் மனையில் என் விருந்தாய் நீ யிருக்க விழைகின்றேன். வாடும் உன் தேவியையும் அரசி போய் அழைத்து வருவாள்

கௌமாரா! நாளைய படையெழுச்சிக்கு வேண்டியன செய்வது உன்வேலை.

சூரசிம்மன் : உனக்குத் தொழும்பு பூண்டொழுகும் எம்பால் நீ காட்டும் அருள் சாலப் பெரியது. இறைவா இதற்கெதிர் உன் திருவடி தாழ்வதல்லால் நான் செய்வதற்கு ஒன்றிலது! (வணங்குகின்றான்)

[அவை கலைந்தது. இளவரசனும் மற்ற வீரர்களும் படையெழுச்சிக்கு வேண்டியவற்றைச் செய்யும் கருமத்தில் பொருந்தினர்.]

காட்சி—5

மலைநாடு—அரண்மனை
பகல் பத்து நாழிகை

[மலைநாட்டு வீரர் இருவர் மாயாவதியுடன் அரண்மனையின் **கண்ணுள்ள** ஒரு மண்டபத்தில் புகுந்தனர். அவ்வேளை, மலைநாட்டரசன் **வஜ்ரதரன்** குடித்துக் களித்துக்கொண்டிருந்தான். வீரரோடு **வந்த** பெண்ணின் அழகும் முகப்பொலிவும் அவனை வியக்கச் செய்தன.]

வீரன் : *அரசே, ஆயர்பாடியின் கட்டழகி இவள். உனக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தோம்.*

வஜ்ரதரன் : (பொற்கிழி யொன்றைக் கொடுத்து) *நன்று, நீங்கள் செல்லலாம்.* (மாயாவதியை நோக்கி) *வருக, வருக மடமானே ! உங்கள் நாட்டொடு தொடங்கிய போர் உன்னை எனக்கு நல்கியது. பாக்யசாலி நான். போரும் சில வேளை நன்மையையே தேடிவைக்கின்றது.*

மாயாவதி : *நீ தந்த முகத்தையும், கூறிய முகமனையும் எள்ளினேன், போ. வீர, கன்னி யென்னைச் சிறை கொணர்ந்த உனது ஆட்களின் வீரத்தைப் பாராட்டச் சொற்கள்தான் அகப்படவில்லை !*

வஜ்ரதரன் : *வாழி, எனது வீரர்கள் ! பெண் அணங்கே, வெகுளாதே. உன் பொன் பூத்த மேனியும், மதியொத்த வதனமும், கயலன்ன கண்களும்,......*

மாயாவதி : *நில், ஐய ! உன் புலமையை மகிழ நான் வரவில்லை* (இரண்டடி விலகுகின்ருள்).

வஜ்ரதரன் : பெண்ணே! முரணிப் பயனில்லை. மேலும் நீ ஏன் அஞ்ச வேண்டும்? அதோ, பார்! மலைநாட்டுச் செல்வம் உன்னைக் கை நீட்டி அழைக்கின்றது ;

மாயாவதி : நீ கொண்டாடும் அச் செல்வத்திற்கு அறத்தால் நிறைந்த என் நெஞ்சில் இடமில்லை. அதை உனக்குச் சொல்லி என்ன பயன்? அன்பையும் அது வளர்க்கும் அறத்தையும் நீ அறியமாட்டாய். மற்று நீ வகிக்கும் பதவிக்குரியதான அரச நீதியையாவது உன் நலம் கருதி நீ கையாளவேண்டுவது அவசியமாகும். எனவே, முறையிட்டுக் கொள்கின்றேன் : அரசனே, வஜ்ரதரன் என்பால் நினைக்கும் தீங்கு அகற்றி எனக்கு நீ நியாயம் வழங்கவேண்டும் !

வஜ்ரதரன் : பேதையே, அன்பு அறம் நீதி என்ற சொற்களைப் பெய்து என்னை வஞ்சித்துவிடலாம் என்று எண்ணுதே. ஆற்றல் இல்லாத கோழைகள் கட்டியழும் சாதனங்கள் அவை.

மாயாவதி : ஆற்றலுடைய சூரனே, கேள் : ஆயரை வாழ்விக்க வந்த எங்கோமகன் ஐயநந்த வள்ளலின் வாளின் கூர்மையை நீ அறியமாட்டாய். அது, அரணுடைய இம் மலைநாட்டையும் உன் புன்னெஞ்சையும் எட்டவல்லது. அவ்வாளுக்கு அஞ்சியாவது என்னை விட்டுவிடு.

வஜ்ரதரன் ; விட்டுவிடுவதா? என் கைப்பட்ட பசுங் கிளியே, அது இயலாது. உங்கள் அரசன் கை வாளின் கூர்மை அகற்றும் திறம் எமக்குள்து. பெண்ணே, இனி என் கை தவறிச் செல்லலாம் என்று கனவு காணுதே.

மாயாவதி : ஏன் ? வாளொன்றுதானே வேண்டும் பின் கனவா அன்ரு என்பதை நீ கண்டு கொள்ளலாம்.

வஜ்ரதரன் : வாளும் வீசவல்லேயோ? எனின் என் வெற்றிப் பீடத்திற்கு வீரலக்ஷ்மி நீ தான். பெண்ணே, கருமுகிலே வென்றது நின் கூந்தல்...... !

மாயாவதி : அரக்கனே, நில்! நீ இதயம் என்பதில்லாதவன். நல்லறத்திற்கு உன் நெஞ்சில் இடமில்லே. மற்று மறவருக்குரிய முறையையாவது கையாள்வாயாயின் அதுபோதும். என்கையில் வாளொன்று கொடு; சமநிலேயில் போர் செய்து நம் பகை முடித்துக்கொள்வோம்.

வஜ்ரதரன் : சிறு குடிப் பிறந்த சிறுமியே, வாய் பேசி வெருட்டி விடலாம் என்ரு நிணக்கின்ருய் ?

[என்று கூறி மாயாவதியின் கரங்களேப் பற்றினன், அவள், அவனது கரத்தை விலக்கிக் கொண்டு, அயலிருந்த மெய்காவலனது உடை வாளேக் கைப்பற்றினள்.]

மாயாவதி : மனிதப் பதரே, நில். இல்லேயேல் தீண்டிய கையும், பழித்த நாவும் தரையுருளுநங் காண்.

வஜ்ரதரன் : ஏ, கயத்தி! என்ன சொன்னய்? என்னேயா ஏசுகின்ருய்? என் கத்தி முனேக்கும் போதாத பெண் புழுவே, உன்னே நசுக்கி எறிகின்றேன், பார்.

[வஜ்ரதரன் பொங்கும் சினத்துடன் வாளே உருவிக் கொண்டு மாயாவதியின்மேல் முடுகினன். மின்னென அவள் ஒதுங்கி அவனது வாளே விலக்கினள். விலக்கவே அவனது கோபம் பின்னும் அதிகமாயிற்று. இங்கே நிகழ்வதை ஒரு பணிப் பெண்ணின் மூலம் அறிந்த அரசி ஓடிவந்து தன்

புருஷனைத் தடுத்தாள். அவள் பெயர் சத்ய வல்லி.]

சத்யவல்லி : *நில் நில், நாயகா, என்னிது! பெண் பழி பூணவா துணிந்தாய்?*

வஜ்ரதரன் : *இங்கே உன்னை யார் அழைத்து?*

சத்யவல்லி : *மனைவியின் அறம்; சீரிய காதல் சிறகரிந்த பைங்கிளிபோல் உன் எதிர்நிற்கும் ஒரு சிறுமியை வாள்கொண்டு வெருட்டற்கு உன் வீரக் கரம் நாணவில்லையே!*

வஜ்ரதரன் : *பேதாய், போதும் நீ ஓதிய மந்திரம். வேண்டும்பொழுது, நீ கற்ற வித்தையைக் காட்ட வரலாம்.*

சத்யவல்லி : *வேண்டாதபொழுதும், உரியகாலத்தில் விதியென உடனிருந்து உதவுவார் உத்தமிகள். எனது இறையே, உனது நன் மனைவி அல்லளோ நான்? மந்திரம் ஓதும் உரிமை மனைவியர்க்கு இலதோ?*

வஜ்ரதரன் : *வீண்சொற்கள் வழங்கி என் சினத்தை வளர்க்காதே. உள்ளே செல்.*

சத்யவல்லி : *நீ சூழும் பழிநியில் விழுந்துபடவா என்னைப் போகச் சொல்கின்றாய்? இல்லை, நான் போக மாட்டேன்.*

வஜ்ரதரன் : *இல்லையா! என் ஆணைக்கு எதிரொன்று புரிவதோ நீ? உன் புருஷனின் ஆணை,—மலைநாட்டு வேந்தன் வஜ்ரதரனின் ஆணை—உள்ளே செல்.*

சத்யவல்லி : *தலைவ, வீணே என்னை வெகுளாதே. உனக்கு அடிமை புரிவேன். உன் சேவடி தொழுவேன். உன் நன்மை கருதி இரவும் பகலும் நம் குன்றுறை கடவுளுக்குப் பூசனை புரிவேன். ஆனால்......,*

வஜ்ரதரன் : ஆனால் என்ன ?

சத்யவல்லி : நீ மதிமயங்கி அலாநெறி படருங்கால், தூய என்மனம், நீ மானம் அழியக் கண்டிருக்கும் என்று எண்ணுகின்றாய் ? நல்ல என் நாயகா, நீ தாழ்த் தரியாத என் காதலின் தூய்மையை நீ போதியபடி அறியவில்லை. அப்பெண்ணைப் பார் ! பால்வடியும் அவளது இள முகத்தையும், அம்முகத்தின் கரவற்ற தன்மையையும் கண்டக்கால், கன்னெஞ்சும் கரையுமே! காதல் தலைவ, நான் சொல்வதை இகழாதே. நம் வயின் வாய்த்த ஒரு மகள் என இத்திருமகளைப் போற்றுவோம். நாளை அரச மரியாதையுடன் ஆயர்பாடிக்கு அனுப்பிவைப்போம். நீ வகிக்கும் பதவிக்கு ஏற்ற கருமம் அதுவே. நினைந்த பிழைக்குப் பரிகாரமும் அது ஆகும். (மாயாவதியை நோக்கி) மகளே, வா. அவ்வாளை என்னிடம் கொடுத்து விடு. அது உன் இளங்கரத்தின் மென்மையொடு பொருந்துவது ஒன்றன்று.

மாயாவதி : அன்னையே அனையாய், இதோ, தந்தேன். உத்தமி நீ அயல் இருக்க, எனக்கு வாளின் துணையேன் ?

வஜ்ரதரன் : வீரர்காள், என்பால் வாள்நீட்டி வசை வழங்கிய இப்பெண் புழுவைச் சிறைசேர்ப்பீர். சோறும் நீரும் அவள் கண்ணில் காட்டவேண்டா. ஏ,கயத்தி! உன் துடுக்கெல்லாம் விரைவில் அடங்கிவிடுங் காண்.

[சேவர்கள் அவளைச் சிறையழைத்துச் சென்றனர். சத்யவல்லி மனம் புழுங்கினளாய்த் தன் கணவனை நோக்கிய வண்ணம் நின்றாள். அவன் அமைதி யிழந்தவனாய் அங்கு மிங்கும் நடக்கலானான்.]

சத்யவல்லி: உன் தகுதிக்கு ஒவ்வாத கருமத்தை நீ துணிந்த அக்கணமே...நீ...அமைதியிழக்கலாயிற்று. வேண்டாம். பெண்பழி பூண விரையாதே. உலகம் உன்னை நிந்திக்கும்!

வஜ்ரதரன்: மாதே, உலகம் என்னவேண்டுமெனினும் சொல்லிக்கொள்ளட்டும். இதற்கெல்லாம் அஞ்சுபவன் நான் அல்லன். என்னை அவமதித்த அச்செருக்கியை மானமழித்துப்பின் சித்ரவதைசெய்து கொல்கிறேன், பார்.

சத்யவல்லி: அரசனே, இதுகூற உன் நா நாணவில்லையே! இது வீரமன்று, ஆண்மையின் வாரமன்று. இம்மலைநாட்டின் பெருமையொடு உனது நற்பெயரையும் வீணே மாய்த்துக்கொள்ளாதே. உன் நலமே கருதி இது கூறுகின்றேன்.

வஜ்ரதரன்: ஏ, ஏ, வாயைமூடு. என் நலத்தை நான் அறிவேன். எனது இந்தக் கருமத்தில் தலையிட்டு என் கோபத்திற்கு ஆளாகாதே. புருஷனைக் குறுக்கிடுவது தான் பத்தினித் தருமமோ? என் நாட்டில், என் மனையில், எனது ஆட்களின்முன் எனக்கு வசைவழங்கிய அப்பெண்பேயின் செருக்கை அடக்காமல் அமையேன்.

சத்யவல்லி: ஐய, நன்று. மனைவியின் கடமையை நான் அறிவேன். கொண்டவன் மாசுறு வண்ணம் காப்பது அவள் கடன். எனவே, உனக்கு ஒரு மனைவியாய் அமைந்த நானும் எனக்குரிய கடனை இறுக்காமல் அமைய மாட்டேன்.

[சத்யவல்லி இவ்வண்ணம் கூறி விரைந்து அகன்றுள். வஜ்ரதரன் கொண்ட சினத்தை மதுவின் துணையினுல் அகற்ற முயன்றுன்.]

காட்சி—6

மலைநாடு—சிறை
நள்ளிரவு

[மாயாவதி சிறையின் கண் வாடுகின்றாள். துயிலோ வரவில்லை. தன் தாயையும் தந்தையையும் ஒருபோது நினைத்து அழுங்குவாள். இளவரசனை மறுபோது நினைத்து நெட்டுயிர்ப்புப் போக்குவாள். இப்படி இரவின் பெரும் பகுதி கழிந்தது.]

மாயாவதி: கிருஷ்ண, கோபாலா, உன் அடிமை நான். நீ தந்த இப்பிறவியை உன் திருவடிக்கே சமர்ப்பித்து விட்டேன். ஏற்றருள் வாய்......எந்தாய், என்னொரு அன்னையே, என்னைக் காணமல் எவ்வாறு துடிக்கின்றீர்களோ! கள்வர் தலைவன் கைப்பட்ட நான், இனி உயிரோடு உங்களைக் காண்பதற்கு இல்லை. நன்று, நான்...சாவதற்கு அஞ்சவில்லை. பிறந்தவர் ஒருநாள் சாகவேண்டியது தானே. வாழ்க்கையின் நீளம் வாழ்ந்தநாளின் கணக்கால் அளக்கப்படுவதற்குரியது அன்று. நன்கு வாழ்ந்தவரே நீடுவாழ்ந்தவர். நஞ்சத்து நெல்லன் நான், நெடிது வாழ்ந்து விட்டேன்......இனி எனக்குப் பிறவிப் பிணியுளதேல், கிருஷ்ண, இத்தூயவர்க்கே மகளாய்ப் பிறக்கவேண்டும். இது தான் என் இறுதி வேண்டுகோள்...(அவ்வேளை இளவரசனை உருவெளியாகக் காணலும்) காதல, என் பெண்மையின் தலைவனாய் உன்னைப் பெற்றேன். பெற்றபொழுதே உன்னை இழக்கவும்

நேர்ந்து விட்டது. என் புன்விதி என்னை வஞ்சித்துவிட்டது. ஆம், காதலின் தூதாக வந்து நம்மைக் கூட்டி வைத்த இளமானின் உதிரத்தில் எழுந்த காதல் வளர்ந்து முதிரும் வன்மையை இழந்தது போலும். எனவே, இறைவா, என்னை மறந்துவிடு, நான் வருகின்றேன், விடைதருவாய்.

(சிறிது தளர்ந்து உட்கார்ந்தாள். அவ்வேளை காலடிச் சத்தம் கேட்டது. சிறைக்கதவு திறக்கலாவதைக் கண்டாள்.)

என்ன, பொழுது விடிந்ததா? நன்று, வீரர்களே, நான் சித்தமா யிருக்கின்றேன், வாருங்கள். அவன் கைக் கருவியாகிய உங்கள் மீது எனக்குக் கோபமில்லை, வாருங்கள். உங்கள் தலைவன் ஆணையைச் செய்து முடிப்பது உங்கள் கடன். அவன் தீண்டியதால் பழுதடைந்த இப்பாழுடலை உங்கள் இஷ்டம்போல் கூறு செய்து விடுங்கள்.

[அப்பொழுது சத்யவல்லி, தன் முக்காடு அகற்றிச் சிறைக்குள் நுழைந்தாள். இது மாயாவதிக்கு வியப்பைத் தந்தது. ஒன்றும் விளங்காதவளாகத் திகைத்து நின்றாள்.]

சத்யவல்லி : மகளே, இந்தா, இந்தப் பாலை அருந்து. ஏன் வியந்து நோக்குகின்றாய்? உன் நலமே கருதி வந்தேன்.

மாயாவதி : பாலா...அம்மா, எனக்கு? உனக்கு வந்தனம். நமன் வாயில் களித்துக்கொண்டிருக்கும் எனக்குப் பாலேன்! என் மரணவஸ்தையில், விக்கல் எடுக்குமேல், தாயே, அப்பொழுது நல்ல உன் கரத்தால் இப்பாலைப்

துளித்துளியாய் விடலாம். இப்பொழுது எனக்கு வேண்டா.

சத்யவல்லி : ஏனம்மா நொந்துகொள்கின்றாய்? உன்னைச் சிறை விடுக்கவே வந்துள்ளேன். ஆயர் திருவே, பாலை அருந்து. பேசுவதற்கு நேரமில்லை. இந்தா, இந்த உடையை அணிந்துகொள். உன் துன்பம் அகன்றது.

மாயாவதி : தாயே, உன் கருணைக்கு மகிழ்ந்தேன். உன் துணைகொண்டு நான் தப்பி ஓடுவதா? இல்லை. உன்னை அவன் கொடுமைக்கு ஆளாக்கி விட்டா? ஒரு நாளுமில்லை. மேலும் உனக்குத் தக்கதும் ஆகாதே நீ அவனுக்குத் துரோகம் செய்ததாகுமே! வேண்டா, நான் சாகத் துணிந்துவிட்டேன். உயிருடன் என்னை அவன் தீண்டுதல் இயலாது. செத்தபின் நாயொடும் பேயொடும் அவன் இவ்வுடலைப் பிய்த்துத் தின்னட்டுமே!

சத்யவல்லி : நல்லாய், நல்லன் என் நாயகன். ஏதோ சிறிது மயங்கிக் கிடக்கின்றான். என் பொருட்டு அவனை மன்னித்து விடு. மகளே, நேரமாகின்றது, புறப்படு, புறப்படு...

மாயாவதி : நீயிட்ட பிச்சையாய் இவ்வுயிரைச் சுமந்து செல்ல நான் விரும்பவில்லை. நான் தமிழப்பெண்! உயிரேனும் எம்மவர் இரந்து பெறமாட்டார்!

சத்யவல்லி : இல்லை, யாசிப்பவள் நான். உன்பால் நான் வேண்டிப் பெறும் வரம் ஒன்று உளது.

மாயாவதி : அது என்னவோ? கொடையின் திறம் அறிந்த தமிழர், கேட்டபின் ஒருநாளும் மறுக்கமாட்டார். இந்த என் நிலையில் இயலுமேல், அது உனதே.

சத்யவல்லி : வாழி! நான் வரம்பெற்றேன். 'பாவி யென்று வையம் என்னைப் பழிக்குமே,' என்று சோதரி என் உள்ளம் அஞ்சுகின்றது. 'கன்னியொருத்தியின் கற்பழித்த பாதகனின் மனைவி யிவள்,' என்ற பழி என்னைச் சாராவண்ணம்...காக்குமாறு, வள்ளலே, உன்னை இரக்கின்றேன். ஏன் யோசிக்கின்ருய்? கொடுத்த வரத்தை மறுப்பையோ!

மாயாவதி : பெரியோய், உன் பெருமைக்கு அடிமையானேன். கொள்வதேபோல் கொடுத்துவிட்டாய்! உன் சித்தப்படி செய்கின்றேன்.

[சத்யவல்லி கொடுத்த ஆண் உடையைத் தரித்துக் கொண்டாள். "பின்னர் செய்ய வேண்டியது யாது" என்று கேட்பவள் போல் சத்தியவல்லியை நோக்கினுள்.]

சத்யவல்லி : மகளே, எல்லா ஏற்பாடும் செய்துள்ளேன். இந்தா, இந்த மோதிரத்தை அணிந்துகொள். இதைக் கண்டவுடன் வாயிற் காப்பாளன் வழிவிடுவான். கோட்டையின் புறத்தில் குதிரையொன்று காத்திருக்கும். இடையூறு எதுவும் இல்லாமல் நீ உன் நாட்டை அடையலாம்.

மாயாவதி : (சத்யவல்லியைத் தழுவிக்கொண்டு) அன்னையே, நான் வருகின்றேன்.

சத்யவல்லி : (கண்ணீர் பெருக்கினளாய்) போய் வா; போகுமுன் ஒன்று கேட்க விரும்புகின்றேன். ஒரு வரம், ஆம்...இன்னொருவரம்...சோதரி, நீயன உன்பால்

இழைத்தானேனும், அவன் என் கணவன் என்பதை மறவாதே.

மாயாவதி : என் உயிருள்ள அளவும் மறக்கமாட்டேன். தாயே, அவனை மன்னித்தேன். ஏன், நீ வாழ்வதால் புண்ணியம் எய்திய இந்த நாட்டையும் மன்னித்தேன்.

[சத்யவல்லியை இறுகத் தழுவிக் கொண்டு, பின் வழிக்கொள்கின்ருள்.]

காட்சி—7

தேவலோகம்.

[*நாரதர் வியந்து பார்த்துக்கொண்டிருக்கிறார்.*]

நாரதர்: *பரந்தாமா, பிரபோ! என்னே இப் பெண் மணிகளின் பெருமை! தமிழ் நல்லறத்தில் முதிர்ந்த கனிகள் இவர். உன் திருவடித்தாமரைக்கு ஏற்ற நிவேதனம் ஆயினர்.*

கிருஷ்ணன்: *இத்தகைய கனிகளை என்னிரு கண் களால் உண்டு உவக்கவே, என் மெல்லடிகள் உல கெலாம் தேடியலைகின்றன.*

நாரதர்: *தேவா, இது கண் கொள்ளாக் காட்சி, என் உள்ளம் உருகுகின்றது. இத்தகைய சான்றவர் ஒருவர் இருவர் இருக்கையால் அன்றோ, இவ்வுலகம் இன்னும் அழிந்து படாமல் இருக்கின்றது. வாழி இவ்வுலகம்! வாழி அவ்வனிதையர்!*

கிருஷ்ணன்: *நாரதா, பொறு, இன்னும் காண்.*

காட்சி—8

ஒரு வெளியிடம்
மூன்றும் நாள்—உதயம்

[மாயாவதியைச் சிறைமீட்டுச் செல்ல வந்த ஆயர், இரவு வந்ததும், மலைநாட்டிற்கு அருகாமையில் உள்ள ஒரு வெளியிடத்தில் தங்கினர். பொழுது விடியும் வேளை. வீரர்கள் படை யெழுந்து செல்ல ஆயத்த மாயினர். இளவரசன் தன் குதிரையின் அயல் நின்று கொண்டிருந்தான். படைத் தலைவனான சூரசிம்மன், சிந்திப்பவன் போல் ஒரு கல்லின்மேல் வீற்றிருந்தான். எங்கும் சங்கொலி முழங்கிற்று. அவ்வேளை, இரண்டு வீரர்கள் மலை நாட்டுச் சிறுவனைப்போல் வேடங்கொண்ட மாயா வதியைப் பற்றிக் கொணர்ந்து இளவரசன் முன் நிறுத்தினர்.]

முதல் வீரன் : பெரும, இம்மலை நாட்டுச் சிறுவன் இவ் வழி வந்தான்.

இரண்டாவது வீரன் : அவ்வஞ்சகரின் கையாள் இவன். ஒற்றுடவே வந்துள்ளான்.

முதல் வீரன் : அவன் குதிரையின் வந்த வேகமும், விழித்த விழியும்,...பெரும, நோக்கின்...அவன் ஒற்றனே தான்.

இரண்டாவது வீரன் : எமக்குப் பதில் மொழியவும் மறுத்தான்.

முதல் வீரன் : நிற்கும் நிலையாலும், சொல்லின் தொனியாலும், உனது பணி பூண்ட எங்களை, அரசே, அவன் இகழ்ந்தான்.

கௌமாரன் : பெண்மைக்குரிய மென்மை யெல்லாம் கவர்ந்து கொண்ட இளையோய், நீ யாவன்? எது கருதி இவண் வந்தாய்?

மாயாவதி : ஐய, நான் மலைநாட்டிலிருந்து வருகின்றேன். ஆனால், நான் ஒற்றுட வரவில்லை.

கௌமாரன் : இவ்வேளையில், நாங்கள் தங்கியுள்ள இவ்விடம் நோக்கி நீ வருவானேன்?

மாயாவதி : இறைவன் படைத்த உலகில் நினைத்த இடம் செல்லும் எனது உரிமையை, ஐய, நீ மறுக்கமாட்டாய் என்று நினைக்கின்றேன். எனது சொல்லில் உனக்கு நம்பிக்கை இல்லையாயின் நான் வேறொன்றும் சொல்வதற்கு இல்லை.

இரண்டாவது வீரன் : மீசை முளையாக் கொள்ளைக் காரா! இல்லையா? யார்முன் பேசுகின்றாய் தெரியுமா? எங்கள் இளவரசன்.

முதல் வீரன் : நேரே பதில் சொல்லாயாயின், கள்வனே, உன் இளமுதுகு பழுத்துவிடும்!

மாயாவதி : சூரர்களே! இந்த வெருட்டல்களுக்கு நான் பயந்தவன் அல்லன். என் முன் நிற்கும் செம்மல் இளவரசனாயின், மன்னவர்க்குரிய அறத்தை அவன் உணர்ந்தவனாய் இருப்பான். எனின், யாருக்கும் எத்தீங்கும் இழைத்திலாத நான், ஏன் அஞ்ச வேண்டும்?

கௌமாரன் : இளையோய், உன் தோற்றமும், சொல்லும், அது போக்கும் தொனியும் என்னை வசீகரிக்கின்றன. மலைநாட்டில், அக் கள்வர்களுக்கிடையே, நீ

பிறக்க நேர்ந்ததே என்றுதான் நான் வருந்துகின்றேன். இருக்கட்டும், உங்கள் நாட்டார் எம்மவர் கன்னியைச் சிறைபற்றிச் சென்றனர். அது பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா?

மாயாவதி: ஒரு கன்னியைச் சிறை கொணர்ந்தது உண்டு. மலைநாட்டரசனின் மனைவி, அருந்ததி அனைய கற்பினள். அப்பெருமகள் உறையுமிடத்தில் ஒருவரும் தீங்குறுர். எனவே, அஞ்சவேண்டா.

[மாயாவதியைக் கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்த சூரசிம்மன் அருகே வந்தான். தன் மகளின் ஜாடையை இச்சிறுவனிடம் காணவே, அவன் வியந்து போனுன்.]

சூரசிம்மன்: ஐய, உனது கூற்றுல், வாடும் என்னுயிரை எனக்கு அளிக்கின்றுய்; ஆம், அரண்மனையின் உட்புறச் செய்திகளை நீ அறிவாய் என்று நினைக்கின்றேன். அப்பெண்ணை அறிவாயோ! அவள் என் மகள். அவள் என்ன செய்கின்றுள்? என் மகளின் ஜாடையை உன்பால் காண்கின்றேன். எனக்கு ஆண் குழந்தையில்லாக் குறையை உன்னுல் நிறைத்துக்கொள்வேன். ஆம், மகனே, மலைநாடு நீ வாழ்வதற்குரிய இடமன்று! சொல், சொல், அவள் எங்கே இருக்கிறுள்? அவளை மீட்டுச் செல்லவே வந்துள்ளோம்.

மாயாவதி: தீங்கிலாதபடி அவள் உங்களை அடைவாள்.

கௌமாரன்: அடைவாளா!

சூரசிம்மன்: உண்மையா? எப்பொழுது?

மாயாவதி: இதோ இப்பொழுதே (புனைந்த வேடம் அகற்றி) எந்தாய், என்னை அறியவில்லையோ! (வணங்குகின்றுள்)

[எல்லோரும் வியந்து நின்றனர். சூரசிம்மன் மகளை வாரியெடுத்துத் தழுவியும் உச்சிநுகர்ந்தும் ஆனந்தக்கண்ணீர் சொரிந்தான். பின் எல்லோரும் வாழ்த்தொலி எடுத்தனர். இளவரசன், தனக்கும் மாயாவதிக்கும் இடையே எழுந்த நட்பை அவளது தந்தை அறியனுதலால், அவளை நெருங்க அஞ்சித் தன் உள்ளத்தின் மகிழ்ச்சியைப் பார்வையால் தெரிவித்தான். அவளும் தாழ்ந்து வணங்கித் தன் தந்தையின் அருகணைந்து தரை நோக்கி நின்ருள்.]

கௌமாரன் : படைத்தலைவ, நீ உன் செல்வியுடன் நம் திருநாடு திரும்புவாய். இம்மலைநாட்டுக் கயவருக்குப் புத்தி புகட்டி, நாளை சூரியன் விழுமுன் நான் நகர் திரும்புவேன்.

மாயாவதி : எந்தாய், என்னை மீட்கவே வந்தீர். நானும் மீண்டேன். இனி நாம் நகர் திரும்புவதே அமையும். மன்னர்பிரான் ஆணையை ஏற்காமல் இளவரசர் கூறும் விதம் துணிதல் நேரியதாகாது.

சூரசிம்மன் : இளவரசே, எம்செல்வி கூறுவது சிந்தித்தற்குரியதே. ஆம், மன்னர்பிரான் திருவுளத்தை முதலில் அறிதலே முறை. அவனது ஆணையொடு ஆசியும் பெற்று நாம் நாளையே இக்கருமத்தில் பொருந்தலாம். எனவே, நாடு நோக்கிப் புறப்படுவோம்.

இளவரசன் : நம்பால் பழிசூழ்ந்த வஜ்ரதரனது தலையைக் கொய்யாமல் நாடு திரும்ப எனக்கு மனமில்லை. ஆனல், தலைவ, உனது தலைமையில் வந்துள்ள நான், உன் ஆணைகடப்பதற்கு இல்லை.

[இளவரசனும் படைத்தலைவனும், மாயாவதியுடனும் வீரர்களுடனும் ஆயர்பாடி திரும்புகின்றனர்.]

காட்சி—9

மலைநாடு-அரண்மனை

காலம்—பகல்.

[மாயாவதி சிறையகல உதவியதற்காக, வஜ்ரதரன் தன் மனைவியின்மீது அடங்காக் கோபங் கொண்டான். சத்யவல்லி அவனது கோபத்திற்குச் சிறிதும் அஞ்சவில்லை. அறத்தால் வரும் அஞ்சாமை அவளது ஆயிற்று.]

வஜ்ரதரன் : என்முன் வாள்நீட்டியும், வசைவழங்கியும் வீரம் பேசிய ஆயர்பாடிப் பெண் சிறைமீள உதவிய நீயா மனைவி? துரோகி, நீ எனக்குப் பகையானாய். நீயும் அவள் பின் ஓடிச்செல்.

சத்யவல்லி : உன் இதயம் அமர்ந்த என்னையோ ஐய, இப்படி உதறித் தள்ளுகின்றாய். நாயகா, நீ குறையக் குறையுமே என் மனம். நான் வலம் வரும் கோயிலும், வழிபடும் கடவுளும் நீயானபோது......,

வஜ்ரதரன் : பேதையே, வாயை மூடு. கோயிலாம், கடவுளாம்! ஒரு வேசியும் தன் காதலனுக்கு இது புரியாள். உன்னைக் காண என் கண் கூசுகின்றது.

சத்யவல்லி : அரசே! செம்மைசேர் மனத்தைச் சினத்தால் ஏன் இப்படிப் பொசுக்குகின்றாய்? உன் குலம் என்ன, கல்வி என்ன, வீரந்தான் என்ன! எல்லாம் இருக்க, நீ இப்படிப் பழியினில் விரைகின்றாயே! பழி

சூழ்ந்த வாழ்க்கை வழிதூர்ந்து போகுமே. தலைவ பெண் பழி பொல்லாது!

வஜ்ரதரன் : *பெண் பழி! ஆம்...அப்பொல்லாப் பழியைச் சூழ்ந்தே தீர்வேன். அதற்கு நீதான் காரணம். சேவகா, இவள் திறந்த அச்சிறையில், இவளை இறுகப் பூட்டு. மாதே, நாளையே ஆயர்பாடியை முற்றுகையிட்டு, அச்செருக்கியைக் கொணர்ந்து, உன் கண்முன் மானமழித்துச் சித்ரவதை செய்கின்றேன் பார்.*

சத்யவல்லி : *வீணனே, உன்னை நான் இப்படி நினைக்கவில்லை கடவுளே!......*

வஜ்ரதரன் : *என்ன சொன்னாய்!*

சத்யவல்லி : *'உன் கருத்தின் வழி செய்' என்று சொன்னேன். ஆம், மானமுடையதே. கௌரவமுடையதே. வஜ்ரா, நீ மதி கெட்டாய்!*

வஜ்ரதரன் : *ஏ, கயத்தி வாயை மூடு இல்லையேல்...*

சத்யவல்லி : *இல்லையேல் என்ன செய்வாய்? என் நெஞ்சத்தின் வன்மையை நீ அறியமாட்டாய். அறத்தால் வரும் வன்மை அது. தீயனே, உன் அதிகாரத்தை எள்ளினேன், போ.*

வஜ்ரதரன் : *சேவகா, அவளை இழுத்துச் செல். ஏன் இன்னும் தாமதிக்கின்றாய்?*

சத்யவல்லி : *சேவகா, நில்! நானே வருகிறேன். நரகத்தின் நட்புடைய தலைவனே, கேள்: நான் பத்தினியாயின், உன் எண்ணமும் முயற்சியும் நாசமாய்ப்*

போய்விடும். மேலும், அவள் அறமகள். அவளை நீ என்ன செய்ய இயலும் என்று எண்ணுகின்றாய்? உன் வஞ்சனையும் வாள் வலியும் பயனற்றுப்போய், நீ கையற்று நிற்கப் போவதை இப்பொழுதே நான் காண்கின்றேன்.

[சத்யவல்லி தன் புருஷனை வெறுப்புடன் நோக்கி விட்டுச் சிறை சென்றாள். அவளது பார்வையை எதிர் நோக்க இயலாமல் வஜ்ரதரன் தலை குனிந்த வண்ணம் நின்றான்.]

காட்சி—10

ஆயர்பாடி-அரண்மனை
காலம்—பிற்பகல்

[மாயாவதியைச் சிறைமீட்கச் சென்றவரிட மிருந்து எச்செய்தியும் கிடைக்கவில்லையே' என்று அரசன் மனத்தளர்ச்சியுடன் இருந்தான். வித்யாநந்தரும் சுதாமனும் அருகில் இருந்தனர்.]

ஜயநந்தன் : அடிகாள், இன்னும் ஒரு செய்தியும் கிடைக்கவில்லை. 'சூரசிம்மனின் மகளுக்கு என்ன நேர்ந்ததோ,' என்று என்மனம் தளர்கின்றது.

வித்யாநந்தர் : கொற்றவா, நீ புரக்கும் நாடுறை மக்களைத் தீண்டும் வலி தீங்கிற்கும் இலது. எல்லாம் நன்றே முடியும். இன்னபடி இடையிடையே வந்துறும் துன்பத்தினால்,தான் இன்பமும் தனக்குரிய மதிப்பைப் பெறுகின்றது.

ஒரு வீரன் : (அங்கு வந்து) அரசர் பெரும, எல்லோரும் வருகின்றனர். படைத்தலைவனின் மகள் இனிதே திரும்பினாள்.

சுதாமன் : அப்பா, குளிர்ந்தது என்மனம்! மலைநாட்டுப் பகைவன் நீடூழி வாழட்டும்!

வித்யாநந்தர் : ஏனப்பா, இப்படி வாழ்த்துகின்றாய்!

சுதாமன் : காரணமில்லாமலா, சுதாமன் ஒன்று கூறுவான்?

ஜயநந்தன் : சொல்லேன், கேட்போம்.

சுதாமன் : ஒன்று தோன்றியது. மாயாவதியின் வாட்கையோ கொடியது. அதை அன்று மான்வேட்டையின்கண் கண்டேன். நமது அரசர்பிரானுக்கோ பகையென்பது இல்லை. இருக்கின்ற இந்த ஒரு பகைவனையும் அவள் வாட்கை அகற்றிவிட்டால், மன்னர் பிரானின் கூர்வேலுக்கு இடம் எங்கே தேடுவது என்று தோன்றியது. வாழ்த்தினேன்.

[அவையிலிருந்தவர் சிரித்தனர். அவ்வேளை இளவரசனும், சூரசிம்மனும் மாயாவதியுடன் அவை வந்தனர்.]

சூரசிம்மன் : கொற்றவா, வாழி உன் வெற்றிவேல்! என் மாமகளுக்குப் பழுது எண்ணிய அக்கயவனது மனத்தொடு மெய்யும் துடிதுடிக்க என் கைவாள் விரைகின்றது. உனது ஆணையை எதிர்நோக்குகின்றேன்.

கௌமாரன் : அதுவே தக்கது. பணியுளதேல் எந்தாய், இன்றே புறப்படுகின்றோம்.

வித்யாநந்தர் : இளவரசே, இரு. கருமம் துணியுமுன் நன்கு கருதவேண்டும்.

சுதாமன் : வாழி, எம் அமைச்சர்பிரான். ஆம், கருமம் துணியுமுன் நாம் நன்கு கருதவேண்டும். என் பெருந்தேவியும் அடிக்கடி எனக்கு அப்படித்தான் சொல்வாள். ஆம், அரசே, நாம் நன்ருக யோசிக்க வேண்டும்.

மாயாவதி : பெரும.........

வித்யாநந்தர் : மன்னர்பிரான் செவிக்கு ஒன்று உளதேல், சொல்லலாம்.

ஜயநந்தன் : நல்லாய், செவிதந்தேன்.

மாயாவதி : முள்ளிற் படர்ந்த மல்லிகையேபோல், அரசே, உத்தமி ஒருத்தி அவனுக்கு மனைவியானாள். என் உயிரொடு மானமும் காத்தவள் அப்பெருமகள். எனவே, போர்.....போர்...வேண்டா.

கௌமாரன் : மற்று, ஆயர் கோழையர் என்ற பழி நம்மைச் சார்வதோ !

வித்யாநந்தர் : இளையோய், இளமையின் வேகத்தால் குருதிபெருக்க விரைகின்றாய். அது செய்துவிடுவது சுலபம். மற்று, இழைத்த தீங்கைப் பொறுப்பதற்குத் தான் வீரம் பெரிது வேண்டும்.

மாயாவதி : ஆம், இழைத்த தீங்கைப் பொறுப்பதற்குத்தான் வீரம் பெரிது வேண்டும். அரசே, செய் நன்றி கொன்ற பழியை நாம் பூணுவதா? நன்றி கெட்டார் ஆயர் என்று அப்புண்ணியவதி ஏசுவாளே! மன்னவா, ஒன்றும் கெட்டு விடவில்லை. எனவே......

ஜயநந்தன் : திருமகளே, நன்று, போர் என்னும் முன்பே எமக்குப் புகழ்தேடி வைத்தாய்.

வித்யாநந்தர் : குணமென்னும் குன்றின் முடியின் மேல் சூரசிம்ம, உன்மகள் நிற்கின்றாள். இனி நமக்கும் இந்நாட்டிற்கும் ஏது குறை?

சுதாமன் : அவள் குன்றேறியதை நான் அறியேன். ஆனால், அரசே, இளவரசனுடன் காட்டில்புதர் மறைந் தாடியதை......

[இளவரசனும் மாயாவதியும் நாணி நிற்கின்றனர்.]

சூரசிம்மன் : இறைவா, அவள் துணிந்த...இதை... நான் அறியேன். அறியாமையினால் இச்சிறுமி......

வித்யாநந்தர் : அதிருஷ்டசாலி எம் இளவல். படைத் தலேவ, ஏன் அஞ்சுகின்றாய்?

ஜயநந்தன் : புலவா, உன் விகடம் வெற்றிபெற்றது. மகளே, வா. உன்னால் என்குலம் சிறக்கட்டும். சூரசிம்மா, இனி நாம் உறவின் நெருங்கினவர்கள் ஆனோம். நல்ல தோர் நாளில் உன் மகள், என் மகன் திருமணத்தை நடத்திவைப்போம். இந் நந்நாளை நம் திருநகர் நாளைய தினம் கொண்டாடட்டும்.

சூரசிம்மன் : எம்பெரும, வாழி! எம்மை நீ ஆட் கொண்டவிதம் பெரியது.

[படைத்தலேவன் ஆனந்தக் கண்ணீர் சொரிந்த வனாய் அரசனே வணங்கினான். எல்லோரும் இள வரசனேயும் மாயாவதியையும் வாழ்த்தினர்.]

காட்சி—11

ஆயர்பாடி—ஒரு சோலை
நான்காம்நாள்—மாலை

[பூஞ்செடிகள் அடர்ந்த ஒரு சோலையில், தாமரைத் தடாகத்தின் கரையில் ஒரு மரத்தடியில் இளவரசன் மௌனமாய் உட்கார்ந்திருந்தான். மாயாவதி குதிரை யேறி விரைந்து வருகின்ருள்.]

கௌமாரன்: மாயா, என் உள்ளத்தை ஒளி செய்த திருவே, வா. உனது வாராமையின் களைத்த என் மனம், உன் வரவினுல் தளிர்க்கின்றது.

மாயாவதி: அண்ணலே, ஆயம் விலக்கிவரச் சிறிது நேரமாயிற்று.

கௌமாரன்: நல்ல உன் ஆயத்தார் வாழட்டும். இக் காலதாமதத்திற்குக் காரணமாய் அமைந்த அவர் நீடூழி வாழட்டும். இப்பொழுது நானுறும் இன்ப மிகுதிக்கு, அவரே காரணம்...மயிலனையாய், உன் தெய்வத் திருவில் இன்று நான் புதுமை சில காண்கின்றேன். உன் அஞ்சனக் கண்கள் கடையோடிக் காதுடன் உறவாடுகின்றன. உன் உள்ளத்தின் இக்களவை உன் இள முறுவல் வெளியாக்கி விடுகின்றது. இப்புதுமைக் கலை எங்கே கற்ருய்?

மாயாவதி: உன் காதற் கலாசாலையில்.

கௌமாரன்: நல்ல உன் உறவினுல், நானும் புதுமை சில கற்கின்றேன். இப்பழம் பெரும் பிரபஞ்சம், இன்று

புதிய சோபையுடன் பொலிகின்றது. மாயா, வா. நம்மைச் சேர்த்துவைத்த விதியினரை வாயாரப் போற்றி மனமார வழுத்துவோம்.

மாயாவதி: ஐய, இல்லை. என் வரையில் அது செய்வதற்கு இயலாது. உன்னல் நிறைந்து நிமிரலான என் கன்னி யுள்ளத்தில், பிறிதொன்றை நினைக்கவும், போற்றவும் இடமில்லையே.

கௌமாரன்: திருவின் திருவே, இளவசை எய்தினேன். என்வாய் செய்த பிழைக்குத் தக்க தண்டனையே அது...அதோ, பார். அக்கிளையில், புருக்கள் ஆணும் பெண்ணுமாய் அலகுடன் அலகு பொருந்தக் குலவுகின்றன.

மாயாவதி: என் அரசே, நான் வீடு செல்கின்றேன். அடிக்கடி என் மனம் சோர்வு அடைகின்றது. இல்லாத ஒன்றைச் செய்தவத்தினல் பெற்று, மீண்டும் அதை இழந்தவர் உறும் சோர்வு இன்று என்னை உழக்குகின்றது. என் வழியில் இடம் வந்த காக்கை, வல்விதியின் கருமத்தைக் குறிப்பது போலும்.

கௌமாரன்: மாயா, வாய்த்த இத்தனிமையை உவக்காமல் நீ தளர்வதால், என்னுள்ளத்தில் துன்பத்தையே பெய்கின்ருய். தூயவள் நீயாக, உன் எதிர் விதியும் வலியழிந்து போக வேண்டியதே. எனவே அஞ்சுதல் ஒழிப்பாய். வா, பூக்கொய்து மகிழ்வோம்.

மாயாவதி: அரசே, என்னுள்ளத்தை முகிலிட்டு மறைக்கும் இந்த இடம் வேண்டா. வேறு இடம் செல்வோம்.

[காதலர் இருவரும் தோளொடு தோள்பொருந்த மெல்ல நடந்து செல்கின்றனர். ஊர் விழாக்

கண்டு களித்த பின், சுதாமன் இளவரசனைத் தேடுபவனாய் இவண் வந்து சேர்ந்தான். காதலர் பேச்சின் இறுதிப் பாகத்தை அவன் கேட்க நேர்ந்தது.]

சுதாமன் : இட்டு மறைக்கும் முகிலை அகற்றிவைக்கும் மருந்து வெய்யில். அதை நாடிக்கொள்ளாதவர் முகிலின் ஆட்சிக்கு உட்பட்டு வருந்தவேண்டியது தான்.

கௌமாரன் : சுதாமா, என்னடா பிதற்றுகின்றாய்?

சுதாமன் : நானா பிதற்றுகின்றேன்? காரிய காரணத் தெளிவு இல்லாதவர்கள்தான் அது செய்வார்கள்.

கௌமாரன் : நல்ல என் தர்க்க சாஸ்திரியே, சொல்வதை விளங்கச் சொல்.

சுதாமன் : அதுதான் நான் செய்கின்றேன். சிறிது அவசரப்படாமல் கேள்; எங்கள் பாட்டியிருந்தாளே, பாட்டி,......அவள் சொன்னாள்,.........

கௌமாரன் : அந்த உங்கள் பாட்டி என்ன சொன்னாள்?

சுதாமன் : உன்னைச் சிறிது பொறுமையுடன் கேட்கச் சொன்னாள்! நண்பா, நீ இப்படிக் குறுக்கிட்டால் என் கருத்தின் தொடர்பு குலைந்துவிடும். நான் இப்பொழுது கருத்துலகத்தில் சஞ்சாரம் பண்ணிக் கொண்டிருக்கின்றேன், தெரியுமா?

கௌமாரன் : இப்பொழுது தெரிந்தது. அப்படிச் செய்து இம்மண்ணுலகத்தை மோசம் செய்துவிடாதே. அது இருக்கட்டும், பாட்டி சொல்லியதைத் தொடர்வோம்.

சுதாமன்: என் வணக்கத்திற்கு உரிய அவள் ஒரு மந்திக் கதை சொன்னாள். அந்த மந்தி என்ன செய்தது தெரியுமா?

கௌமாரன்: மந்திப் புலவா, எனக்கு எப்படித் தெரியும்? மந்திப் பழக்கம் எனக்கு இல்லை. முன்னுரையும் முகவுரையும் முயலாமல் நீயே சொல்லிவிடு.

சுதாமன்: கேள், இரு கண்ணாலும்......இல்லை...... காதாலும் கவனமாய்க்கேள்: ஒரு க்ஷேத்திரம். அங்கே ஸ்வாமிக்குப் புறப்பாடு நடந்தது. வாத்தியங்கள் கோஷித்தன. அருகிருந்த மந்தியொன்று, தனக்கு ஏதோ ஆபத்து வந்துவிட்டதாக அஞ்சி ஒரு மரம் ஏறி முகில் பார்த்துக் கலங்கியதாம். அதன் அறியாமையைப் பார்த்தாயா?

கௌமாரன்: இரு காதாலும் பார்த்தேன். பிறகு...

சுதாமன்: பிறகு...அது உன்னைப்போல் விழித்தது. இளவரசனாகப் பிறந்துவிடலாம்; படைத் தலைவன் மகளைக் களவில் கூடலாம்; எல்லாம் செய்யலாம். ஆனால்.........,

கௌமாரன்: ஆனால் என்னடா?

சுதாமன்: விஷய விளக்கம் வாய்ப்பதற்கு நுண்ணறிவும், செய்தவமும் வேண்டும்.

கௌமாரன்: நுண்ணறிவும் செய்தவமும், மந்திக் கதையும் ஒன்று சேர்ந்து என்ன செய்யப்போகின்றன?

சுதாமன்: விஷய விளக்கமாம் வெயிலைத் தந்து, உன் காதலியின் உள்ளத்தைத் திரையிட்டு வருத்தும் முகிலை அகற்றிவைக்கப் போகின்றது......அதோ பார்

உன் மாயாவதி சிரிக்கின்றாள். நான் சென்றவிடமெல்லாம் மனக்களிப்பும், வாய்ச் சிரிப்புந்தானே!

மாயாவதி புலவர் கூற்றில் கருத்தும் உளது.

சுதாமன்: ஏன் அம்மா 'கருத்தும் உளது' என்று கூறுகின்றாய்? எப்பொருளில் அந்த உம்மை வந்துளது?

மாயாவதி: ஐயா, நான் இலக்கணம் கற்றதில்லை. வாய்தவறி வந்த உம்மை அது.

சுதாமன்: உண்மையை ஒத்துக்கொண்டாய், நன்று. கருத்தற்ற சொற்கள் என்வாய் வாரா. நிற்க, நமது துன்பத்திற் கெல்லாம் நமது அறியாமையே காரணம். அந்த மந்தியைப்போல் இல்லாத பயத்தைக் கற்பித்துக் கொண்டு, அது நேராத திசையை நோக்கியும் அஞ்சி அழுங்கியும் வாழ்க்கையில் துன்பத்தைப் பெய்துகொள்கின்றோம்.

கௌமாரன்: சுதாமா, நல்ல கதையடா; மிகமிக நல்ல கதை. இது கேட்க மகிழ்ந்தேன்.

சுதாமன்: மகிழ மாட்டாயா! வெயில் என நான் வந்து உதவினால் ஏன் மகிழமாட்டாய்? இப்படி உதவும் ஒரு நண்பனைத்தானே, நீ விட்டுவிட்டுத் தனியே வந்து விட்டாய்? ஆடுமிடம், பாடுமிடம், வாள் சுழற்றுமிடம் எல்லாம் தேடித்தேடி என் கால் அசந்து போயிற்று.

கௌமாரன்: என் இள வெயிலே, இனி அப்படிச் செய்யமாட்டேன். போராகட்டும், பொழுதுபோக்கு ஆகட்டும், இனி நீ உடன் வருவாய்.

சுதாமன்: *போரா!......நரகத்திற்கு வேண்டுமானுலும் வருவேன். ஆனுல்......அங்கே நான் வருவதற்கு இல்லை.*

[காதலர் இருவரும் வாய்விட்டுச் சிரித்தனர். அவ்வேளை இரணபேரிகை இடியென அதிர்ந்தது. நகரத்தார் அஞ்சி ஓடினர். வீரர்கள் குழம்பினர். மாயாவதியை அழைத்துக்கொண்டு இளவரசன் அரண்மனை சென்றுன். சுதாமன் வீடுநோக்கி ஓடினுன். மலைநாட்டு அரசன், வஜ்ரதரன் நகரைப் பெரும் படையுடன் சூழ்ந்துகொண்டான்.]

காட்சி—12

ஆயர்பாடி—அரண்மனை

நான்காம்நாள்—இரவு

[அரண்மனையில் மந்திராலோசனை சபை. ஜயநந்தன், அமைச்சரும் ஆசார்யருமாய் அமைந்த வித்யாநந்தருடனும், படைத்தலைவனுடனும் வந்துற்ற பகையை விலக்கும் விஷயமாய் ஆலோசனை செய்து கொண்டிருந்தான். மாயாவதியும் இளவரசனும் ஒரு பக்கம் வீற்றிருந்தனர்.]

ஜயநந்தன் : அக்கொடியவன் கருத்து எனக்கு விளங்கவில்லை. இப்படி அவன் செய்வான் என்று தெரிந்திருந்தால், மலை நாட்டையே நாம் போர்க்களமாகச் செய்திருக்கலாம். கடவுளே, இவ்வளநாடு பாழடைய வேண்டு மென்பதோ உன் கருத்து!

வித்யாநந்தர் : இறைவா, இப்படி நீ வருந்தலாமா!

ஜயநந்தன் : வேறுநான் என்னதான் செய்வது? நம்நாட்டை அக் கீழ்மகன் சுற்றி வளைத்துக்கொண்டான். கோட்டைக்கு வெளியிலிருக்கும், நம்படை இங்கு வருவதற்கு இல்லை. இருக்கும் ஆயுதமும், உணவுப் பொருளும் விரைவில் குறைந்துவிடும். இந்த நிலையில், அடிகாள், நான் என்ன செய்வது?

சூரசிம்மன் : கொற்றவா, உள்ளிருந்து நாம் தற்காப்புப் போர் செய்வதில் பயனில்லை. ஒரு வாரம் கழியுமுன்

நம்மவர் பசிப்பணிக்கு ஆளாக நேரிடும். எனவே, நாம் கோட்டையகன்று அவர்களைத் தாக்குவதே அமையும். ஆணையுளதேல், என்கடன் இறுப்பேன்.

ஜயநந்தன் : பகைவர் இருபதினாயிரவர். நம் வீரரின் தொகையோ ஆயிரத்திற்கு அதிகமாகாது. தெரிந்து நான் என் வீரர்களை நமன் வாயில் செலுத்துவதா? நான் பூபாரம் தாங்கியது போதும்!

வித்யாநந்தர் : வேந்தர்வேந்தே, தளராதே. இதனில் ஏதோ கடவுளின் கருத்து உளது. அறவழி நின்றுரை உறுதிப்படுத்துவதற்கு, இறைவன் புரியும் லீலா விநோதம் இது என்று நினைக்கின்றேன். அவனது லீலை இறுதியில் மெய்ந்நெறி நன்மையில் முடிய வல்லது. எனவே ஒரு வழி ஏற்படும். அரசே, தர்மமே வெல்லும். நம் பகைவன் எத்துணைப் பல முடையவனாயினும் அவனிடம் தர்மம் இல்லை. நான் சென்று அவன் கருத்தை அறிந்துவருகின்றேன்.

ஜயநந்தன் : அது தக்கது என்று தோன்றினால், செய்யலாம். ஆனால் தேவரீரைத் தனியே அக்கொடியவனிடம் அனுப்ப எனக்கு மனம் இல்லை. அடிகாள், நானும் உடன் வருகின்றேன்.

வித்யாநந்தர் : இல்லை; இந்நாட்டின் நல்லுயிர் நீ. என்னை அவன் ஒன்றும் செய்யமாட்டான். மேலும், எனக்கு ஒன்று நேர்ந்ததெனில் அது என் தலையொடு முடிந்துவிடும். அரசே, உன் பொறுப்போ பெரியது. எனவே, நீ வரலாகாது.

கௌமாரன் : எந்தாய், ஆற்றலுடைய வீரர் சிலருடன் அமைச்சர்பிரானை நான் தொடர்வேன்.

வித்யாநந்தர் : இளவரசே, நீயும் வேண்டா. என் நெஞ்சு நிறைந்த கடவுளே துணையாக, நானே செல்கின்றேன். எனக்குத் தீங்கு இழைக்க அவன் நினைக்கமாட்டான்.

ஜயநந்தன் : எனின் பெரியீர், தேவரீரது கருத்தின் வழி செய்யலாம். இறைவனது சித்தம் நடக்கட்டும்.

[அவை கலைந்தது. மாயாவதி கலங்கிய உள்ளத்துடன் தந்தையைத் தொடர்ந்தாள்.]

காட்சி—13

ஆயர்பாடி
பகைவன் பாசறை
இரவு—பத்து நாழிகை

[*ஆயர்பாடிக் கோட்டைக்கு வெளியில் பகைவர் பாசறை. வித்யாநந்தர் வஜ்ரதரனது கூடாரத்தை அடைந்தார். வந்தவரை, அவன் மரியாதையுடன் வரவேற்றான்.*]

வஜ்ரதரன் : *ஐய, வருக. வயதால், தோற்றத்தால் பெரியரான நீர் யாவரேனும் ஆகட்டும். உங்களைப் போன்ற சான்றவரை வரவேற்கும் விதத்தை மலை நாட்டார் அறிவார்.*

வித்யாநந்தர் : *நான் ஓர் அந்தணன். ஆயர்பாடியின் அமைச்சன் என்ற முறையில் இப்பொழுது நான் வந்துள்ளேன்.*

வஜ்ரதரன் : *எனின், நன்று. ஐய, இப்பாலையும், பழத்தையும் அருந்துவீர். இது மலைநாட்டுத்தேன் தேவரும் விரும்பி நுகர்தற்காம்.*

வித்யாநந்தர் : *மன்னா, உன் வரவேற்புச் சிறப்புடையதே. ஆனால், உண்டு மகிழ்ந்து செல்ல நான் வரவில்லை நான் வந்த கருமம் பெரியது.*

வஜ்ரதரன் : *அப்பெரிய கருமம் யாதோ ?*

வித்யாநந்தர் : *சொல்கின்றேன் கேள். எம்மை ஏன் ஐயா முற்றுகை சூழ்ந்தாய் ? எமது எப்பிழைக்கு*

எதிராக இது நிகழ்ந்தது? குலப்பகையே காரணமாயின் சென்று கழிந்ததைத் தலைமுறை தலைமுறையாகத் தொடர்தல் அறிவுடைமை ஆகாது. பகைத்துப் போர் வளர்க்க நாம் பிறக்கவில்லை.

வஜ்ரதரன்: அமைச்சரே குலப்பகையே இம்முற்றுகைக்குக் காரணம் அன்று.

வித்யாநந்தர்: எனின், வேறு யாதோ? மண்ணை கருத்தாயின் மன்னவா, இன்றே பெற்றுக்கொள். எம் கொற்றவன் நீண்ட உனக்கு உவந்து வழங்கும்......

வஜ்ரதரன்: இல்லையென்று வாய் திறக்கும் எளியவர் மாட்டு ஜயநந்தன் கை நீளட்டும். வேந்தர்க்கு அழகு செய்யும் யானையும் குதிரையும் எம் மலைதந்த செல்வம். மண் வேண்டுமெனின் என் கைவாள் தேடித்தருமே.

வித்யாநந்தர்: மற்றுப் போரே கருத்தாயின் எம்மவர் தோளிலும் தினவுண்டு. எங்கள் படை மறமும், எம் படைத்தலைவனது தோள்வலியும், நாங்கள் வென்று வென்று சூடிய வெற்றிமாலையின் நீளமும், நீ அறியாதவை அல்ல.

வஜ்ரதரன்: அறிந்தேதான் இக்கருமத்தில் கால் வைத்தேன். புகழுடைய உங்கள் படை மறத்தைச் சோதித்து நான் அறியாமல் திரும்புதற்கில்லை.

வித்யாநந்தர்: எனின், நீ சோதித்து அறியலாம். போர் அறம் வழுவாத வழி இக்கருமம் நடக்கட்டும். அன்னதற்கான வசதியை அளிக்க எமக்கு நீ மறுக்க மாட்டாய் என்று நம்புகின்றேன். அறுபது நாழிகை அவகாசம் கொடு. அதற்குள் எம் படைத்தலைவன் படை திரட்டிப் போருக்கு ஆயத்தமாவான். பின்னர்

குறித்த வேறோர் இடத்தில் நீ உன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

வஜ்ரதரன் அமைச்சரே, அது இயலாது. வைத்த பொறியை விலக்கமாட்டேன்.

வித்யாநந்தர்: ஐய, இது வீரனது வாய்வரும் வாசகம் அன்று. ஒருவர் உற்ற எளிய நிலையில் தன் நலம் நாடிக் கொள்ளும் கைதவக் கள்வன்தான் இப்படிச் செய்வான். நீ வீரனுெடு ஓர் அரசனும் ஆகின்ருய்.

வஜ்ரதரன்: காரிய சாதனைக்குரிய வழியில் தான் இப்பொழுது முயல்கின்றேன். ஒவ்வோர் வேளை, கையாளும் கருவியைக் கருதாமல் இருப்பதும் வெற்றிக்கு அவசியமாகும்.

வித்யாநந்தர்: அதனை நான் அறியேன். ஒரு வேளை அது மலைநாட்டார் வழி ஆகலாம். நிற்க, நீ சாதித்துக் கொள்ள முயலும் காரியந்தான் என்ன? போரிலா வழி அது இயலுமாயின் கொலையையும் கொள்ளையையும் அகற்றலாம் அல்லவா?

வஜ்ரதரன்: செய்யலாம். குலப்பகையே காரணமாகத்தான் முதலில் என் வீரருக்குச் சிறிது விளையாட்டுத் தந்தேன். ஆனல் உங்கள் தீவினை வேருக முடிந்தது. ஐய, முன் நாள் எம் சிறைப்பட்ட கன்னி, என் உள்ளம் கவர்ந்த இள மயில், அவள்......அவள்......என் கை தப்பி ஓடிவிட்டாள். அவளது கனிவாய் முத்தம் நான் பருகும் வரையில், தழுவிய எனது இருகரங்களினிடையே அவள் உயிர் போகும் வரையில், அமைச்சரே, வைத்த பொறி விலக்க மாட்டேன்.

வித்யாநந்தர்: மூடனே, நில். ஏன் ஐயா, இந்த அமானுஷ்ய அநாகரிகம். உனக்காக நான் இரங்குகின்

றேன். வேண்டா, உனது இக்கருமத்தைத் தொடராதே. அவள் கன்னியே ஆயினும், ஒருவருக்குக் காதலியும் ஆயினள். அரசனே, இந்த எண்ணத்தை அகற்றிவிடு; இதமே சொல்கின்றேன், இது நல்லம் அன்று; அரச நீதியும் ஆகாது.

வஜ்ரதரன் : நீதியோ, அன்றோ? யாம் கொண்டதே விதி. இரண்டில் ஒன்று, இயைந்தபடி செய்வீர். அவளை இறைப் பொருளாகத் தந்தால் முற்றுகை தானே விலகும். இல்லையேல், அவளொடு இந்த நாடும் ஒரு சேரமாயும். இது உறுதி.

வித்யாநந்தர் : எது உறுதி? நாம் நினைத்தபடி எதுவும் நடப்பதில்லையே. ஐயனே, யோசித்துச் சொல். நான் நாளை மறுமுறை வருகின்றேன்.

வஜ்ரதரன் : யோசிப்பதற்கு ஒன்றுமில்லை; முடிவுரை கூறி விட்டேன்.

வித்யாநந்தர் : இதுதான் முடிவுரையோ! நான் போகலாமோ! மாற்றுதற்கு இயலாதோ!

வஜ்ரதரன் : ஆம், இயலாது. நீதித் தெய்வமே வந்து மன்றாடினாலும் இதுதான் முடிவுரை.

வித்யாநந்தர் : எனின், செய். இராவணனும் ஒரு நாள் அப்படித்தான் கூறினன். அரக்கனே, நான் சென்று வருகின்றேன். போரே தருகின்றோம்........எம் பசுக்கொடி பறக்க, எம் வெற்றி முரசம் நாளை உதயம் உன்னை அறைகூவி அழைக்கும். கொடியோய், வா. நரகம் உனக்கு வாய்திறந்து காத்திருக்கின்றது.

வஜ்ரதரன் : அமைச்சரே, எனது ஆணையில்லாமல் நீவிர் திரும்புவதற்கில்லை. சேவகா, இவரை அழைத்துச் செல்.

வித்யாநந்தர் : ஐய, நான் ஒரு தூதன்; நான் போக வேண்டும்.

வஜ்ரதரன் : உம்மைச் செலவிடுதல், எம் சூழ்ச்சிக்குப் பொருந்தவில்லை. சிறிது பொழுதில், என் நாட்டிலே என்னை இகழ்ந்த அச்சிறுமியை இவண் காண்பீர்.

வித்யாநந்தர் : இல்லை, நீ ஆயரை அறியாய்.

வஜ்ரதரன் : உம்பால் அவர் வைத்துள நேயத்தை அறிவேன். உமது உயிரின் எதிர் அவர் எது புரியார்?

வித்யாநந்தர் : தீயனே, என் உயிரினும் அவளது மானத்தை அவர் ஓம்புவர். உன் எண்ணம் நடவாது. எம்மவர் பக்கம் அறம் உளது, எனவே நான் அஞ்சவில்லை. ஆனல் ஒன்று கூறுவேன். உத்தமி ஒருத்தியை நீ மனைவியாகக் கொண்டிருப்பதால், நான் உன்னை சபிக்க விரும்பவில்லை. நீ நல்வழிப்படவேண்டி, என் நெஞ்சம் நிறைந்து உறையும் இறைவனைத் துதிப்பதில் இவ்விரவைக் கழிப்பேன்.

[சேவகன் வித்யாநந்தரை அழைத்துச் சென்றான்.]

காட்சி—14

அரண்மனை—ஆலோசனை சபை
இரவு—பதினைந்து நாழிகை

[*அரண்மனையில் மந்திராலோசனை சபையில், அரசனும் படைத்தலைவனும், இளவரசனும் அமைச்சரை எதிர் நோக்கியவர்களாய் வீற்றிருந்தனர். மாயாவதி இரு தோழியருடன் ஒரு மறைவிடத்தில் அமர்ந்திருந்தாள். அவ்வேளை மலைநாட்டுத் தூதன் ஒருவன் அவண் வந்து அரசனை வணங்கினான்.*]

தூதன் : *அரசே, மலை நாடர் மன்னவன் பணியில் வந்த ஒரு தூதன் யான், உன்னடி பணிகின்றேன்.*

ஜயநந்தன் : *ஐய, வருக. உன் வரவு நல்வரவாகட்டும். எமது அமைச்சர்பிரான் எங்கே?*

தூதன் : *அரசே! நின் செவிக்குரிய செய்தியொன்று கொடுவந்துள்ளேன்.*

ஜயநந்தன் : *பகையகற்றி நம்மை நட்பின் பொருந்த வைக்குமாயின், அச்செய்தியை மிக மகழ்ச்சியுடன் வரவேற்போம்.*

தூதன் : *இம் முற்றுகையும், இரு நாட்டிற்கும் இடையே தொடர்ந்து வரும் குலப் பகையும் அரசே, ஒருங்கே அகலலாம்.*

ஜயநந்தன் : *எனின், அதை அறிய எம்மனம் விரைகின்றது. நிற்க, எமது அமைச்சர் ஏன் திரும்பவில்லை?*

தூதன் : எம்மவர் விருந்தாய் இனிதே இருக்கின்றார்.

ஜயநந்தன் : நன்று, நீ கொடு வந்த செய்தியைச் சொல்.

தூதன் : எமது அரசன் உம்பால் வேண்டிப்பெறுவது ஒன்று உளது. அதுவும் நட்பே கருதித்தான். பெரியதும் அன்று அது.

ஜயநந்தன் : நட்பே கருத்தாயின், அவன் வேறு வழியைக் கையாண்டிருக்கலாம். அது போகட்டும். அவன் வேண்டுவது நன்னெறியதாயின், அது பெரியதாகட்டும் சிறியதாகட்டும், தாழாது உவந்து தருவோம்.

தூதன் : அரசே, கேள். அன்று எம்மவர் கைப்பட்ட சிறுமியின் கையை விழைகின்றான். (எம் தலைவன்.)

சூரசிம்மன் : கயவா, வாயை மூடு......(அவனது கை உடைவாளைத் தேடியது)

கௌமாரன் : இது கூறிய உன் புன் வாயைக் கிழித்து எறிகின்றேன் பார்...... (வாளை உருவுகின்றான்)

ஜயநந்தன் : மைந்தா, பொறு. அவன் தூதனாய் வந்துள்ளான். (தூதனை நோக்கி) ஐய, இதுவோ அவன் கருத்து......பழிக்கஞ்சாப் பாதகன்.......நன்று, நீ செல்லலாம்.

தூதன் : அரசே, நீ மறுப்பாயேல், இவ் வளநாடும், உங்கள் அமைச்சரது நல்லுயிரும் எம் அரசனது சீற்றத்திற்கு ஆளாக நேரிடும்.

ஜயநந்தன் : ஏ மூடனே, நில். உன் அரசனையும் அவன் சீற்றத்தையும் எள்ளினேன் போ. இனி நீ என் கண்ணகன்று செல்

தூதன் : எனின், விடை பெற்றுக்கொள்கின்றேன்.

சூரசிம்மன் : கள்வனே, இல்லை.

தூதன் : வேந்தே, தூதனென்று நும் முன்னே போந்துள்ளேன் நான்; என் செலவு தடுத்தல் முறையாமோ?

சூரசிம்மன் : எம் அமைச்சரும் உங்கள் பால் தூதாகவே சென்றார். உங்களிடமிருந்து கற்றதையே இப்பொழுது கையாள்கின்றோம். மேலும் உனக்குத் தீங்கிழைப்பது எம் கருத்தன்று.

தூதன் : பின் ஏன் இது?

சூரசிம்மன் : நீ இப்பொழுது செல்வது எமது கருத்திற்கு இயைந்ததாய் இல்லை. (அரசனை நோக்கி) அரசே நமது அமைச்சர்பிரானின் உயிரின் பொருட்டு இது அவசியமாகின்றது. நாளை உதயத்தில் அவனை அனுப்பி விடலாம்.

ஜயநந்தன் : எனின் நன்று. வீரர்காள், இவனை அழைத்துச் சென்று காவலில் வைப்பீர்.

[வீரர்கள் தூதனை அழைத்துச் சென்றனர். அரசன் திகைப்புடன் வீற்றிருக்கின்றான்.

கௌமாரன் : அப்பொழுதே கிள்ளி எறிந்திருந்தால், இந்நிலை நேர்ந்திராது. நன்றியறிதலாம்!...பெண் புத்தி கேட்டுக் கெட்டோம்.

ஜயநந்தன் : இளையோய், நீதிக் கடங்கியே அன்று போர் தொடராது விடுத்தோம்.

கௌமாரன் : அந்நீதி வளர்த்த பயனை இன்று காண்கின்றோம்.

ஜயநந்தன் : (மனத்தளர்ச்சியுடன்) வயது முதிர்ந்த உன் தந்தையைச் சொற்கொண்டு சுடுவதோ, உன் கருத்து. மைந்த......

கௌமாரன் : என் ஆருயிர்த் தந்தையே, மூண்டெழுந்த சினத்திஞல், என் வாய் விரைந்து விட்டது. என் பிழை பொறுத்தருள்வாய். (வணங்கின்ருன்)

ஜயநந்தன் : சூரசிம்மா, என் செய்வேன். என் மனம் களேக்கின்றது. என் கண் சுழல்கின்றது. ஆயரின் கதி......அமைச்சரின் உயிர்......, மகளே,...உன் பெரும் மானம்......நான் பிறவி எடுத்தது போதும்.

சூரசிம்மன் : ஏந்தலே, தளரவேண்டா. பசியின் உயிர் தேய்ந்து கழிவதினும் பகைக்கு மார்பு கொடுத்து மடிவதே முறை. அது புகழும் ஆகும்....மேலும், அரசே என் உள்ளத்தில் புதியதோர் ஊக்கம் கிளர்ந்தெழுகின்றது. உதயத்தில், நாம் கோட்டையகன்று பகைவரைத் தாக்குவோம்.

ஜயநந்தன் : அவர் இருபதிஞயிரவர். நம்மவர் தொகை ஆயிரத்திற்கு அதிகம் இல்லேயே.

சூரசிம்மன் : இருந்தால் என்? இயற்கை ஆற்றலொடு நம் வீரர், அறவழி நிற்பதால் வந்து பொருந்தும் ஆண்மையும் பெற்றவராகின்ருர். எனவே, ஒருவர் நூறு பேருக்கு ஈடு கொடுக்க இயலும்......மேலும், இறைவா மனித முயற்சியால் செய்யக்கூடியவற்றைச் செய்துள்ளேன். பகைவன் நம்மைச் சூழ்ந்துகொண்டதை அறிந்ததும், உன் முத்திரை மோதிரத்துடன் பாணப் பெண்கள் பதின்மரைப் போக்கியுள்ளோன். மதி நலத்திஞல் அவர் பகைவரைக் கடந்து, வெளிப்புறம் இருக்கும் நம் படைஞரை, இந்நேரம் சேர்ந்திருப்பார். நம் போர்

முரசின் ஒலி எட்டியதும் அவர் பகைவரை தாக்குவார். நாம் இப்புறம் இருந்து கலக்குவோம்.

ஜயநந்தன் : இவ்வேற்பாடு சிறந்தே விளங்குகின்றது. ஆனுல் ஒன்று மறந்தனை. நாம் போர் எழுந்தால், அக்கயவன் அமைச்சரைக் களப்பலி ஆக்குவானே !

சூரசிம்மன் : இறைவா, அதையும் மறக்க வில்லை. சிறிதுபோழ்தில், வீரர் சிலர் வேடுவக் கோலம் பூண்டு பகைவர் பாசறை சென்று, அவரொடு உறவு கொள்வர். போர் துவக்குமுன் இரகசிய வழிமூலம் ஒரு சிறு படையுடன் நானே சென்று அமைச்சரின் உயிரைக் காப்பேன்.

ஜயநந்தன் : உன் தோள்வலியும், நுண்மதியும் எனக்குத் துணையாக, திருவளிருன் துணையும் கிட்டுமேல்......

சூரசிம்மன் : ஐயனே், திருவருளின் துணையும் உளது. அறம் வெல்வது உண்மையாயின், நாம் அஞ்சவேண்டுவதில்லை.

ஜயநந்தன் : எனின், செய். இக்கருமத்தில் நானும் என் மகனும் உனது ஏவலில் அமர்கின்ருேம்.

சூரசிம்மன் : எந்தலே, வரம் பெற்றேன். வெற்றி உன்னைச் சாரவும், என் மகளின் பால் பழிநினைத்த அக்கயவன் அழியவும் இனி முயல்வேன்.

[இவ்வேளை மாயாவதி மனச்சோர்வுடனும் பொலிவு இழந்த முகத்துடனும் விரைந்து அகன்ருள்.]

ஜயநந்தன் : சிம்ம, ஒரு முகூர்த்தம் கடந்தபின் கிருஷ்ணகோட்டத்தில் நம் வீரர் கூடட்டும்.

[எல்லோரும் அகல்கின்றனர்]

காட்சி—15

அரண்மனை—ஓர் அறை

இரவு—இருபது நாழிகை

[மாயாவதி, அவளுக்கென அமைந்த ஓர் அறையில் பாலகிருஷ்ண உருவந்தாங்கிய படத்தின் முன் நின்றுகொண்டிருந்தாள்.]

மாயாவதி: கிருஷ்ணா, உன் அருளின் வளர்ந்து செழிந்த எம் கொற்றவன் செங்கோல் நடுங்கவும், எமது பழுதற்ற வீரர், முற்றுகை தாங்குதற்கான வசதியின்மையால் கலங்கிக் குழம்பவும், இவ்வளநாடு அல்லலிற் படவும் நேர்வதா?.........நாளைக் காலை...அப் பேய்மகன் கேடு சூழாமல் இரான். ஐயகோ, நானா இதற்குக் காரணம் ஆகவேண்டும்! திருமகள் கொழுநனே, நான் பெண்மையை வளர்த்துப் பழியே தேடிக்கொண்டேன்......... வேண்டேன் நான் இப்பிறவி. நான் பெண் பிறந்து வாழ்ந்தது போதும். அமைச்சரும் இந்நாட்டு சாது ஜனங்களும் சாவதைவிட, நான் ஒருத்தி அழிந்து போவதே அமையும். எனவே, அவன் நச்சியதால் பழுதடைந்த இப்பாவி உடலை அக்கயவன் முன் வீசி எறிவேன்.....ஆம், அதுவே தக்கது......

[கிருஷ்ண படத்தில் சாத்தியிருந்த மாலையிலிருந்து ஒரு மலர் விழுந்தது. மாயாவதி அதைக் கையேந்

திக் கண்களில் ஒற்றிக்கொண்டு தன் தலையில் சூட்டிக் கொண்டாள்.]

கிருஷ்ணு, பாண்டவ சகாயா, உன் சித்தம் இதுவே போலும். எனின் புறப்படுவேன். உன் திருவுளக் கருத்து நடக்கட்டும்.

[இப்படிக் கூறிய மாயாவதி கிருஷ்ண படத்தை நோக்கினுள். அவள் திருமேனியைத் தெய்வத் திரு பற்றியது. வெள்ளை உடை அணிந்து, வெள்ளைக் கொடி தாங்கிக் குதிரையின் மேல் ஏறிப் புறப்பட்டாள். கோட்டையைக் கடந்து பகைவனது பாசறை நோக்கி விரைந்தாள்.]

காட்சி—16

ஆயர்பாடி—சுதாமன் வீடு

பின் இரவு

[*இராஜபக்தியுள்ள சுதாமனின் மனைவி தன் புருஷனைப் போர்க்கோலங்கொண்டு புறப்படச் செய்கின்றாள். அவன் போகமனம் இல்லாமல் தயங்குகின்றான்.*]

பெருந்தேவி : *ஏன் இப்படி விழிக்கின்றீர்? நாழிகை ஆகவில்லையா?*

சுதாமன் : *என்னை எங்கேயடி போகச்சொல்கின்றாய்?*

பெருந்தேவி : *கிருஷ்ண கோட்டத்திற்கு.*

சுதாமன் : *அங்கே போய் நான் என்ன செய்வது?*

பெருந்தேவி : *படையோடு சென்று, நம்மால் ஆனதைச் செய்வது? போங்கள், நாழிகை ஆயிற்று.*

சுதாமன் :—*எமலோகத்துக்குத்தான் போகவேண்டும். ஏன், நான் உயிரோடிருப்பது உனக்கு இஷ்டமில்லையோ! தாலியும் மஞ்சளையும் இழக்கத்தான் இப்படி என்னை துரத்துகின்றாய்.*

பெருந்தேவி : *நாட்டுக்கே ஆபத்து வந்திருக்கும் போது, தாலியும் மஞ்சளும் போனால் போகட்டும். வாங்கி வாங்கித் தின்னோமே, அந்தக் கடனைக் கழிக்க வேண்டாமா?*

சுதாமன் : 'போய்ச் செத்து மடியடா' என்கிருய். என்னைப் பெற்றவர்களுக்குத் தெரியும் என் அருமை. உனக்கு என்னடி தெரியும்?

பெருந்தேவி : நீரும் நானும் செத்தால் குடியொன்றும் கெட்டுப்போகாது. வயதுதான் ஒரு பாதிக்குமேல் ஆச்சே.

சுதாமன் : வயதானபடியினுல் தானடி சாக மனம் வரவில்லை. அம்மலை நாட்டுப் பாவியை ஒரு பாம்பு கடிக்கலாகாதா? போரில்லாமல் போகுமே?...கிருஷ்ணு எத்தனை பூஜை பண்ணினேன். சண்டையைக் கொண்டு வந்து சேர்த்து விட்டாயே. என் பூஜை யெல்லாம் வீணுகப்போச்சே...

பெருந்தேவி : பூஜை வீணுகாது. போங்கள். கிருஷ்ணன் நமக்கு ஜெயத்தைத் தருவான்.

[மனம் இல்லாதவனுய் சுதாமன் கிருஷ்ண கோட்டம் செல்கின்ருன்.]

காட்சி—17

பகைவன் பாசறை

இரவின் கடை—யாமம்

[மலைநாட்டரசன் தனது கூடாரத்தில் நல்ல நித்திரையில்லாமல், பிதற்றிய வண்ணம் படுத்திருந்தான். அவ்வேளை மாயாவதி உட்புகுந்தாள்.]

வஜ்ரதரன் : ஐயோ, இல்லை; அரக்கர்களே, என்னை வெட்டாதீர்...குத்தாதீர்...என் உள்ளத்தை இப்படிப் பிழியாதீர்...ஹா, அவள் எங்கே...அவள்...சிறையகன்ற அந்த ஆயர் சிறுமி......ஒரு முத்தம்......ஆம், ஒன்று போதும்...பின்னர் இறந்து விடுகின்றேன்......

மாயாவதி : கைதவக் கள்வ னிவன் துயிலின் இனிமையை எப்படி அறிவான்...உனக்கு அது இல்லை...... நன்று, வஜ்ரதரா, மலைநாட்டு மன்னனே, எழுந்திரு. இதோ வந்தேன்.

வஜ்ரதரன் : (கண் விழித்து) என்ன இது. இது உண்மையா? அல்லது கனவின் நிகழ்வா?

மாயாவதி : கனவு அன்று, நினைவின் நிகழ்வுதான். நானே தான். தீயனே தீமையின் வழியதான உன் ஆசைக்குப் பலியிட இந்த உடலைச் சுமந்து வந்துள்ளேன்.

வஜ்ரதரன் : மாதே, வந்தனையா? நான் நம்பலாமா? அல்லது என் மனக்கலக்கமா? இம்மாயம் எனக்கு விளங்கவில்லை. எங்கே, கத்தியைக் காணவில்லையே?

மாயாவதி: ஏன் ஐயா, மிரள்கின்றாய்? அஞ்ச வேண்டா...இப்பொழுது என்கையில் கத்தியில்லை. நீ நம்பித்தொழும் ஆயுதம் எனக்கு இப்பொழுது அவசியம் இல்லை.

வஜ்ரதரன்: நீ சொல்வதொன்றும் எனக்கு விளங்க வில்லையே.

மாயாவதி: அழுகிக்கிடக்கும் உன் மனத்திற்கு விளக்கம் எப்படி உண்டாகும்? இரக்கம் அற்றவனே, நீ சூழ்ந்த முற்றுகையை விலக்கு. எனது இந்த உடலை ஆசைதீர விழுங்கிவிடு.

வஜ்ரதரன்: பெண்ணே, என்னை இகழ்கின்றாய்.

மாயாவதி: இகழ்வதா, இல்லை. உன்னையா! மலை நாட்டு மன்னனையா! இல்லை. உன் பிறப்பின் பெருமையைப் புகழ்கின்றேன். உன் சூரத்தை மகிழ்கின்றேன்.

வஜ்ரதரன்: திருவின் திருவே, உன் சொல்லும் தொனியும் என்னைக் குழப்புகின்றன. என் மனமோ சுழல்கின்றது. என்னையேன் இப்படி வதைக்கின்றாய். என்பால் எப்பிழை கண்டாய், அம்ம......ஆம், அன்று நான் உன்னைச் சிறிது இகழ்ந்தது உண்டெனின், அதற்கு ஈடும் செய்திடுவேன்......நல்லாய், என்பால் உனக்கு இரக்கம் இல்லையா?

மாயாவதி: என் இதயம் அமர்ந்த இரக்கந்தான் என்னை உன்பால் தூண்டியது.

வஜ்ரதரன்: எனின், உய்ந்தேன். பெண்ணே, இது கேள். மலைநாட்டரசன் வஜ்ரதரன் உன்பால் இரக்கின்றான். போர்முனை என்றும் பின்னிடாப் புகழினன்; உடைவாள் கழலாமுன்னம் பகைப் படை மெய் விதிர்க்கும்

ஆற்றலன்; இதுவரை எவரையும் வணங்கி அறியா முடியினன்; வயதில் முதியவன்; அவன் நின் தளிரடி தொழுகின்ருன்.........திருவே, உன் நெஞ்சம் இளக வில்லை......உன் திருவொடு பொருந்தாத வன்மையை உன் நெஞ்சம் எப்படித்தான் பெற்றதோ? நீயும் ஒரு கன்னி; உன்னை என்னல் மறக்க முடியவில்லை; பிழையும் இலதே!.........சத்யவல்லிக்காக நீ அஞ்சவேண்டா. உன்னை அரசியாக்குவேன்.

மாயாவதி: அப்புண்ணியவதி உனக்கு மனைவியாய் இருப்பதினல்தான் அஞ்சாமல் வந்தேன். அவள் பெருமை உன் பிறவிக்கு இன்னும் எட்டவில்லையே...... வேந்தனே, தோலின் நாற்றத்தில் மோப்பங்கொண்டு நாய்போல் அலைந்து உன்னையே மாய்த்துக்கொள்ளாதே. செம்மையில் செழிக்கும் தெய்வகுணத்தைப் பெறுவதே பிறவியின் முன்னேற்றம்.

வஜ்ரதரன்: எனக்கு இதோபதேசம் செய்யவா வந்தாய்?

மாயாவதி: பத்தினித் தெய்வமாம் சத்யவல்லிக்குக் கணவனய் அமைந்த பாக்கியத்தால், நான் இது கூற நேர்ந்தது.

வஜ்ரதரன்: என்னை, மிகமிகத் தாழ்ந்து மதிக்கின்ருய். நஞ்சு பூசிய சொற்களால் என்னைத் தைக்கின்ருய்...... எனது வீரம்......பெருமை......

மாயாவதி: எதிர்பாராத வழி முற்றுகை சூழ்ந்து ஒருவரை வெருட்டல் வீரமன்று; பெருமையும் செய்து வைக்காது. நிலையற்ற உடலில் வைக்கும் ஆசையை அடக்குவதே வீரம். மனித குணத்தைத் தர்மத்தால் காத்து, செம்மைவழி வளரச் செய்வதே பெருமை. பழு

தில்லாக் கன்னி யொருத்தியின் பழுதற்ற பெண்மையைக் கொன்று தின்பதற்கு வீரம் பெரிது வேண்டா. அது பெருமை யுணர்ந்த செயலும் ஆகாது.....மனிதனாய்ப் பிறந்து, மிருகமாய் இழிய விரையாதே. வாழ வழிகாட்டினேன்......

வஜ்ரதரன் : என் கண்வழி புகுந்து என் உள்ளம் கவர்ந்த வனிதாய், இப்பொழுது உன் வார்த்தை செவி வழி புகுந்து என்னை உறுத்துகின்றது. பெண்ணே, உன்னை அஞ்சுகின்றேன்......ஐயோ, ஆசையே......என் செய்வேன்! மாதே, உன்மேல் வைத்த என் ஆசை...... அது அகல ஒரு முத்தங்கொடேன். ஆம், ஒரு முத்தம்... நான் போய்விடுகின்றேன்...ஒருமுறை தழுவிக்கொள்கின்றேனே......ஒருமுறை......ஆம்......போதும்......

மாயாவதி : மானுடம் இழிந்தவன் நீ. அரக்கனே, இந்தா, நீ நச்சிய உடல். உனது நான்கு கால்களாலும் கட்டித்தழுவி, வேண்டியமட்டும் உன் நிண நாக்கால் நக்கிவிடு......இதற்காகப் போர் புரிய வேண்டா. எம் அமைச்சர்பிரானை நீ கொன்று தொலைக்க வேண்டா...... கிருஷ்ண, பாண்டவசகாயா, துகில்தந்து பாஞ்சாலியின் மானம் காத்தருளிய வள்ளலே, என்னை உனக்கு அர்ப்பணம் செய்துவிட்டேன்.........(வஜ்ரதரனை நோக்கி) பெரும் பேர்பெற்ற சிற்றறிவுடையோய், வஜ்ரதரா, வல்விலங்கே, பாபத்தின் கோரஸ்வரூபமே, வா......நான் வீசி எறிந்த இவ்வுடலை விழுங்கிவிடு, வா...ஏன் தயங்குகின்றாய், விரைந்து வா......பாழ்நரகம் தன் நீண்ட கை நீட்டி உன்னை அழைக்கின்றதே......

[இவளது சொல்லும் செயலும் வஜ்ரதரனைத் திகைக்கச் செய்தன. அவள் திருமேனி தெய்வத்

திருவை வீசியது. அவளது மானுடங் கடந்த தன்மையைக் கண்ட வஜ்ரதரன், அவளை நெருங்க அஞ்சினான். மாயாவதியின் தூய்மை, அவனது அறியாமை அகற்றிவைக்கவும், அவன் தன்னையே உணர்ந்துகொள்ளலானான்.]

வஜ்ரதரன் : உணர்ந்தேன......ஆம்.... இப்பொழுது உணர்ந்துகொண்டேன். தாயே, இருண்டுகிடந்த என் உள்ளத்தில் திருவிளக்கு ஏற்றிவைத்தாய். பாவி என்ற நாமம் படையாமல் என்னைத் தடுத்து ஆட்கொண்டாய்... (மனைவியின் ஞாபகம் வரவும்) சத்தியவல்லி, உன் புண்ணியம் என் தலைகாத்தது. வீர, முற்றுகையை விலக்கிவிடு; மலைநாடு செல்லுங்கள். நம் காவலில் இருக்கும் ஆயரது அமைச்சரைத் தேர் ஏற்றி ஆயரிடம் அனுப்புங்கள்......தர்மம் வென்றது.

மாயாவதி : தக்கதே செய்தாய். உன் கோலும் செங்கோலாயது. வேந்தனே, விடை பெற்றுக்கொள்கின்றேன்.

வஜ்ரதரன் : தேவி, என் மாயை அகன்றது. என்னையும் பெற்றேன். காணும் இவ்வுலகம் இன்று எனக்கு அழகின் வடிவம், அதைக் காணக்காண என் உள்ளம் அன்பு மயமாகின்றது. உன்னைக் கண்டபின், உன் நல்லுறவு பெற்றபின் ஒருவருக்கு எது அரியது.

மாயாவதி : மாயையை வென்றவர்க்கு மாயாவதி உறவினளே. உடன்பிறந்தோய், நான் விரைந்து செல்லவேண்டும்.

வஜ்ரதரன் : மாயாவதி...வாழி, அத்திருப்பெயர். என் வாய்க்குரிய மந்திரமும் அது ஆயது. மாயா......மாயா... மாயா......

மாயாவதி: *சோதரா, நான் போகவேண்டும், எனக்கு விடைதருவாய்.*

வஜ்ரதரன்: *மாயா, இல்லை. உனக்கு வழித்துணை தருவது என்கடன். உன் மெய்காவல் பூண்டு உன் நாயடியன் நான் வருவேன்.*

மாயாவதி: *ஐயனே, இல்லை. நான் வந்தபடியே செல்வேன். சாதுக்களின் அயலிருந்து காத்துதவும் கண்ணனது துணை எனக்கு உளது. உன்னைப் பகையின் கருதும் எம்மவரால் உனக்குத் தீங்கு நேரிடும்.*

வஜ்ரதரன்: *தீங்கா, என்னைத் தீண்டுவதா? மாயா, நீ இருக்கும் இடத்தில் தீமையும் இருக்க இயலுமோ. இப்பொழுது நான் வேறு மனிதன். முன்னையன் அல்லன் நான். நன்மையில் பெருகும் எனக்கு இனி அஞ்சுவதற்கு ஒன்றுமிலது. தேவி, மறுக்காதே; உன்னைப் பெற்றெடுத்த பெரியோரை, நீ பிறக்கத் தவம் செய்த உன் நாட்டாரைக் கண்டு மகிழ விழைகின்றது என் மனம். எனவே, எனது மாறுவேடம் உன் பொன்னடி தொடரட்டும்.*

[இருவரும் இரு குதிரைகளில் ஆயர் அரண்மனை நோக்கிப் புறப்பட்டனர்.]

காட்சி—18

தேவலோகம்.

[இந்த நிகழ்ச்சியைக் கண்டிருந்த நாரதர் எல்லையில் மகிழ்ச்சியின் வயமானார்.]

நாரதர் : *பிரபோ, பெரியது இத்திருமகள் பெருமை. கிருஷ்ணா, உய்ந்தது மானுடம். தன்னையே தந்து தருமம் வளர்த்த அம்மடவரல், வாழி. வாழ்ந்தது இவ்வுலகம்.*

கிருஷ்ணன் : *வாழ்கின்றாள் அவள். அவள் வாழ் வாங்கு வாழ்வதால் மற்றவரும் வாழ்ந்தவர்கள் ஆகின் றார்கள். சான்றோரின் இருக்கையே வேண்டப்படுவது. தோன்றச் செய்யும் தொழிலொன்றும் இன்றியே, அறமலாது பிறிதொன்றும் நினையாமல் நிற்கின்ற நிலை யால், உயிர்களை உய்விக்கும் உதவியில் அவர் உயர்ந் தவர் ஆகின்றார். அந்த இனத்தைச் சேர்ந்தவள் இச் செல்வி. இத்தகைய சாதுக்களைத்தான் தேடி அலைகின் றது என் மனம். அவர் செயல் வழி நடக்கின்றது என் சித்தம். நாரதா, முழுவதும் காண்.*

காட்சி—19

கிருஷ்ணகோட்டம்

உதயம்

[கிருஷ்ண கோட்டத்தில், கிருஷ்ணனது சிலையின் முன் வீரர்கள் ஆயுதந்தாங்கினராய்க் குழுமியிருந்தனர். அரசனும் மைந்தனும் அவர்களுக்கு இடையில் நின்றனர். சூரசிம்மன் விரைந்துவந்து வணங்கினன்.]

சூரசிம்மன் : இறைவா, வாழி உன் செங்கோல். முற்றுகை தானே விலகியது என்று அறிகின்றேன்.

ஜயநந்தன் : எப்படி? என்ன புதுமை இது? இது எவ்வாறு நிகழ்ந்தது?

சூரசிம்மன் : ஏந்தலே, எனக்கு விளங்கவில்லை. நான் போய் அறிந்துவருவேன்.

[இவ்வேளை வித்யாநந்தர் உள்ளே வந்தார். அங்கிருந்தோர் அனைவரும் வியந்து நோக்கினர். அரசன் மனமகிழ்ச்சியொடு வரவேற்றான்.]

ஜயநந்தன் : அடிகாள், வரவேண்டும். தீதொன்றும் இலதே? எல்லாம் விந்தைமேல் விந்தையாய் இருக்கின்றன?

வித்யாநந்தர் : எனக்கும் விளங்கவில்லை. மலைநாட்டு வீரன் ஒருவனும், இரு வேடுவரும் என்னைத் தேரேற்றி இவண் அழைத்து வந்தனர்.

ஜயநந்தன் : என்ன காரணமாயிருக்கலாம் ?

வித்யாநந்தர் : திருவருட் கருத்தை யாரே அறிவார் ? சாதுக்களின் அயல் தோன்ருத் துணையாயிருக்கும் எம்பிரான் கரத்தை இதனில் காண்பதல்லால் வேறென்றும் எனக்குத் தெரியவில்லை. காரணங் கடந்த வழி நிகழவல்லது அவன் புரிகருமம்.

கௌமாரன் : காரணம் என்ன ? நாம் போர் ஏற்கப் புகுந்தோம் என்பதை அறிந்த அக்கோழை தனது ஆட்களுடன் புறங்காட்டி ஓடியிருப்பான்......

[இளவரசன் உரைமுடியுமுன் வஜ்ரதரன் மாயாவதியுடன் உட்புகுந்தான்.]

வஜ்ரதரன் : ஐய, மலைநாட்டார் அதை அறியார். ஓடுகின்ற பகைவர் முதுகிலும் புண்வையார்......

மாயாவதி : (விரைந்து) அன்ப, அறம் வழிகாட்ட விலகியது முற்றுகை.

கௌமாரன் : அறத்தை நீ பெரிது கண்டுவிட்டாய்...

மாயாவதி : கண்டேன்...ஆம்...தலைவ, அறத்தின் முன் மறம் வலியற்றது என்பதைக் கண்டேன்.

கௌமாரன் : என்ன ?

மாயாவதி : சிறிதுமுன், கடவுளே துணையாக, நான் பகை அரசன் பாசறை சென்று, நல்லன எடுத்துரைத்தேன். தன் தவறு உணர்ந்த அப்பெருமகன், முற்றுகையை விலக்கினன்.

கௌமாரன் : பாசறை சென்ருயா ? அடி துரோகி, பழிக்கஞ்சார் பெண்கள்.

மாயாவதி : அரசே, நீயோ என்னை இப்படிக் கடிவது? அலாநெறி படருமோ என் நெஞ்சம்........

கௌமாரன் : சே, வாயைமூடு. வஞ்சமகளே, மதிகெட்டாய். மானம் துறந்தாய். தோற்றத்தின் பகட்டினால் மயங்கி மோசம்போனேன்.....எந்தாய், இப் பேய் மகளுக்குரிய தண்டனை தேசப் பிரஷ்டமே.

சூரசிம்மன் : என்னொரு மகளே, இப்படியும் நேர்வதா?

மாயாவதி : எந்தாய், ஏன் கலங்கிக் கண்ணீர் வடிக்கின்றாய். ஒன்றும் நேர்ந்து விடவில்லையே. உன் கை வளர்ந்த சிறுமியின் மனம் அலாநெறி படருமோ! ....என்னை ஈன்றெடுத்த பெரியோய், நான் செய்ததைக் கேள். நம் அரசர் பெருமகன்பால் என் கடன் இறுத்தேன். இப்பாடி அழிவுறாமல் காத்தேன். மானுட ரத்தம் பெருகி அருவி யிடுவதைத் தடுத்தேன்.....இது இளவரசர் மானத்திற்குப் பொருந்தவில்லை போலும்.....உள்ளவர் உள்ளமெல்லாம் உள்ளவாறு அறியும் மெய்யன் என்னை அறிவான்.....கிருஷ்ணா, உன்னையே புகலாகவுடைய என்னை நீ இப்படிச் சோதிப்பதா?.....கிருஷ்ணா, கோபாலா.....என் செய்வேன்... (கண்களிலிருந்து ஜலம் பெருகுகின்றது)

வஜ்ரதரன் : தேவி, கலங்காதே. இளவரசே, இவளைப் பெற்றதற்கு இந்நாடும் நீயும் பெருந்தவம் இயற்றியிருக்க வேண்டும். இளையோய், கிடைப்பதற்கரிய அமிர்தம் இது; இழந்துவிடாதே.

கௌமாரன் : யாவன் ஐய நீ.....இதற்குப் பதில் சொல்.....பிறகு நீ இவட்குப் பரிந்து பேசலாம்.

வஜ்ரதரன் : நானு.........சொல்கின்றேன்.........இப் புனிதவதியால் வாழ வழியறிந்து நற்கதி அடைந்தவன்; உங்கள் முன் நற்சாட்சியமாக வந்துள்ளேன். நான்தான்... மலைநாட்டரசன், வஜ்ரதரன், (வேஷத்தை களைகின்றான்)

கௌமாரன் : வீரர்காள், இவனைப்பற்றிப் பிணியுங்கள். ஏ, கயவா, மிக விரைவில் கழுமரத்தின் சுவையை அறியலாம்.

வஜ்ரதரன் : ஐய, அறிவு முதிராத இளையன் நீ; பதருகின்றாய்......முன்னவன் அல்லன் நான் என்பதை உனக்குச் சொல்லிப் பயனில்லை. நீ சீறி யிகழும் இச் செல்வி எனக்குப் புதுப்பிறவி தந்தவள். இனி, நீ தரவிருக்கும் கழுமரம் என்னை என்ன செய்யும் என்று நினைக்கின்றாய்? (உடைவாளைக் கீழே எரிந்து) வீரர்களே, என்னைப் பற்றிப் பிணியுங்கள்.

மாயாவதி : (அவ்வாளை எடுத்துக்கொண்டு) வீரர்காள், நில்லுங்கள், உங்கள் அரசன்மேல் ஆணை. இல்லையேல், எடுத்த அடியுடன் தரை சாய்வீர். என் உடலில் உயிர் இருக்கும்வரை, இவ்வுத்தமற்குத் தீங்கு நேருதல் இயலாது......இளவரசே, நீ கற்றதெல்லாம் உடலளவு நேசிக்கவும், நியாயுதரைப் பற்றிப் பிணித்து வதைக்கவுந்தான் போலும்......நன்று...நீ தந்த நேயம், வெளித்தோன்றும் உடலொடு நின்றுவிடும் தன்மையது என்பதை அறியாமற்போனேன். இல்லையேல், உன்னால் நிறையலான என் இதயத்தில் உன்னையே நீ கண்டிருப் பாய்......உன் அன்பில் ஆழம் இலது. எனவே என்னை இப்படி உதறித் தள்ளினாய். ஆடவர் தரும் காதலின் தன்மை இதுவாயின் கடவுள் பெண்களைக் காக்கட்டும்...

எந்தாய்! அடிகாள், நீங்களும் என்னை உணரவில்லையா......

வித்யாநந்தர் : மகளே, நற்றவம் தந்த செல்வி. அறத்தின் நல்லறமே, தேவி, அறிந்தேன். மானுடங் கடந்த உன் பெருமையை உணர்ந்துகொண்டேன். மற்றவர்க்கு அப்புண்ணியம் வாய்க்கவில்லை. தளராதே...... (அவளைத் தழுவிக்கொண்டு கண்ணீர் பெருக்குகின்றார்)

மாயாவதி : ஐயனே, இதுபோம். தேவரீர் கண் வழிந்த நீர் என்னைப் புனிதமாக்கியது. உய்ந்தேன்...... எனக்கு இனிக் குறையில்லை......யார்மீதும் கோபம் இல்லை. (கிருஷ்ண விக்ரஹத்தை நோக்கினாள். அதனில் உயிர்ப்பொலிவு ஆடிற்று.) ஆம், இனி எனக்கு நீயே புகல். கிருஷ்ணா, கோபாலா, பக்தவத்ஸலா, என்னை ஏற்றுக்கொள். மலைநாட்டரசனைத் தீங்கு தீண்டா வண்ணம் காத்தருள். (கிருஷ்ண விக்கிரஹத்தின் பாதத்தைத் தழுவிக்கொண்டாள்.)

[திடீரென்று காற்றுவீச, சிலையின் கழுத்தில் இருந்த மாலை மாயாவதியின் கழுத்தில் விழுந்தது.]

வீரர்கள் : வாழி இப்பெருமகள்! வாழி சூரசிம்மனின் மாமகள்! எம்பெருமான் பொன்னடிக்கு ஆளான இத் திருமகள் வாழி, வாழி! அவள் பிறந்து இருந்து நடமாடிய பாக்கியத்தால் வாழ்ந்தது இவ்வளநாடு! (என்று வாழ்த்தொலி எடுத்தனர்.)

ஜயநந்தன் : எல்லையுடைய எம் புத்திக்கு உன் பெருமை எட்ட இந்நேரம் ஆயிற்று. வஜ்ரதரனுக்கு உவந்துதந்த அருளை எனக்கு மறுப்பையோ! (என்று கூறி அரசன், அவளைத் தூக்கி நிறுத்தினான்.)

சூரசிம்மன் : மகளே, உன்னைப் பெற்றேன், பெற்ற தால் பெறுவதற்குரிய எல்லாம் பெற்றவன் ஆனேன். (அவளை அருமையொடு தழுவிக்கொண்டான்.)

கௌமாரன் : கற்பரசி, அறியாமையின் ஏதோ கூறி விட்டேன். என்னைப் பொறுத்தி.

வஜ்ரதரன் : பிழைத்தவர் பிழையெல்லாம் பொறுக் கப் பிறந்த பெருந்தகை அவள். தேவி ஏற்றுக்கொள்; இளைஞன் அவன்.

கௌமாரன் : மலைநாடர் மன்னனே, உன்பால் நான் நினைத்த பிழை பொறுத்தருள்வாய்.

வஜ்ரதரன் : இளவரசே, வா. நீ பாக்கியசாலி. (மாயாவதி இளவரசன் ஆயவர் கரங்களைச் சேர்த்து வைக்கின்றான்.)

வித்யாநந்தர் : எல்லாம் நன்றே ஆயது. நம்மை ஆட்கொளக் கடவுள் புரிந்த விளையாட்டு இது. இன்று வந்த உதயம் நன்மையின் உதயம் ஆயிற்று.

ஜயநந்தன் : வஜ்ரதரா, எம் விருந்து நீ. எம்மனை சில தினம் தங்கிச் செல்லலாம், வா.

வஜ்ரதரன் : அரசே, உன்சொல் கடக்க வல்லேன் அல்லேன். நிற்க, நான உன்பால் வேண்டிப் பெறுவ தற்கு ஒன்று உளது.

ஜயநந்தன் : ஐய, அது யாதாயினும் உனதே.

வஜ்ரதரன் : மலைநாட்டை மாயாவதியின் வயிறு வாய்க்கும் மகனுக்கு உரிமையாக்கினேன். என் மனம் தவத்துறை விரைவதால், நாடு தாங்கும் பொறுப்பி லிருந்து என்னை இன்றே விலக்கி அருளுமாறு வேந்தே, உன்னை வேண்டுகின்றேன்.

வித்யாநந்தர் : அதுவும் திருவருட் கருத்தாயின், நடக்க வேண்டுவதே.

ஜயநந்தன் : உன் விருப்பம் அதுவாயின், நன்று.

["கிருஷ்ணு, ராமா, கோவிந்தா! ராம, கிருஷ்ணு, கோவிந்தா!" என்று கூறிக்கொண்டு எல்லோரும் கலைகின்றனர்.]

சுதாமன் : கிருஷ்ணு, என் பூஜை பலித்தது. என் பெருந்தேவி வாய்க்குச் சர்க்கரை போடவேண்டும். இனி மலைநாட்டுத் தேனும் தினைமாவும் வேண்டிய மட்டும் தின்னலாம்.

காட்சி—20

தேவலோகம்

நாரதர் : தேவாதிதேவா, கிருஷ்ணு, கோவிந்தா...... (என்று கூறினராய் ஆடுகின்ருர்.)

கிருஷ்ணன் : நாரதா, விளங்கிற்ரு ?

நாரதர் : விளங்கிற்று, தெரிந்துகொண்டேன்.

கிருஷ்ணன் : என்ன தெரிந்துகொண்டாய் ?

நாரதர் : ஆராய்ச்சியில் அடங்காதது உன் சித்தம் என்று தெரிந்துகொண்டேன். காரிய காரணங்களைக் கடந்தது அது என்று தெரிந்துகொண்டேன. மெயந் நெறி நன்மையில் நிறைவது அது என்றும தெரிந்து கொண்டேன். மாந்தர்க்கு உய்யும் வழி உளது. பரந்தாமா, கிருஷ்ணு......

[இப்படி நாரதர் மகிழ்ந்து ஆடினர். கிருஷ்ணன் மறைந்தகன்ருன்.]

சுபம் /

காமராசர் ...

		விலை		
		ரூ.	அ.	
1.	வி. ஓ. சி. கண்ட பாரதி—கவிப் புதுமை காட்டிய தமிழனைக் குறித்துக் கப்பலோட்டிய தமிழன் எழுதியது ...	1	0	0
2.	ஜி. யூ. போப் (தமிழுக்கு உழைத்த ஆங்கில அறிஞர்)	1	4	0
3.	மஹாதேவ தேசாய்—புகழ்மாலை (வார்தா ஹிந்தி வெளியீட்டின் தமிழ் மொழி பெயர்ப்பு)	2	0	[illegible]
4.	தேச ஜோதி (சரித்திரக் கதைகள்) ...	2	8	[illegible]
5.	இன்பத்துளி (சிறு கதைத் தொகுதி) ...	2	0	[illegible]
6.	கைலாஸம்—மானஸரோவர் (யாத்திரைப் புத்தகம்)	2	0	[illegible]
7.	ஸ்வர்ண லதா (பிரசித்தமான வங்காளி நாவலின் தமிழ் மொழிபெயர்ப்பு) ...	5	0	0
8.	சித்திரமும் சொற்சித்திரமும் (83 படங்களுடன்)	5	0	0
9.	Pictures and Pen-pictures (83 pictures) ...	5	0	0
10.	Research in languages	1	0	0
11.	Madras Essential Articles Control and Requisitioning Act, 1946 ...	2	0	0
12.	Rent Control Act	1	4	0
13.	சுதந்திரமா, பாகிஸ்தானா?	2	0	0
14.	ஸெலிமா பேகம் அல்லது மொகல் மன்னரின் அந்தப்புரம்	2	0	[illegible]
15.	புரட்சி செய்த பேனா வீரர்	3	[illegible]	[illegible]
16.	நேதாஜி சுபாஷ்சந்திர போஸ் ...	4	0	[illegible]
17.	காந்தீய நவநீதம்—சொற்பப் பிரதிகளே உள்ளன	5	0	[illegible]
18.	திவ்யப் பிரபந்த ஸாரம் (மாணவர் பதிப்பு)	2	8	0
	Do (பரிசுப் பதிப்பு)	5	0	0
19.	Just a Peep into the Muslim Mind ! ...	5	0	0
20.	Freedom or Pakistan?	2	0	0
21.	முத்தையா பாகவதர்	0	12	0
22.	கதர் மலர்-3	0	12	0